கண் வைத்திய நிபுணர்கள்
பொர்க செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை 08 (5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 161

தன்னாட்சி தனியரசை நிறுவுவதற்கு தன்னிறைவான பொருண்மியம் தேவை

வேளாண் மன்னர் விருதுகளை வழங்கி தேசியத் தலைவர் பிரபா வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 8

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது; இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு,ஒரு தன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம்,

நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு, தங்கு நிலையற்றதாக, தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக் கூடியதாக அமைய வேண்டும், அதற்கான அத்திவாரத்தை நாம் இப்பொழுதிருந்தே கட்டியெழுப்ப வேண்டும்,

வட தமிழீழப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆறு விவசாயிகளுக்கு "வேளாண் மன்னர்" தங்க விருதுகளை வழங்கிக் கௌரவித்து வாழ்த்துரை வழங்கும் போது — தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

"வேளாண் மன்னர்" போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஆறு விவசாயிகளுக்கும், நேற்று முன்தினம் நடத்தப் பெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் "வேளாண் மன்னர்" விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

விருதுகளை வழங்குவதற்கு முன்னர் தலைவர் அவர்களை வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

அவரது வாழ்த்துரை வருமாறு:-

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில், காலத்திற்குக் காலம் நாம் பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகிறோம். பெரும் துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகிறோம். எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கில், சிங்களப் பேரினவாதம், எமது

(6 ஆம் பக்கம் பார்க்க)

முல்லை மாவட்டத்தின் வேளாண் மன்னராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. கந்தையா முத்துக்குமாரு என்ற விவசாயிக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு வே பிரபாகரன் "வேளாண்மன்னர்" விருதையும் சான்றிதழையும் வழங்குவதை படத்தில் காணலாம்.

6 விவசாயிகளுக்கு தலைவர் கௌரவம்

யாழ்ப்பாணம், மே 8

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வட தமிழீழப் பகுதிகளில் நடத்தப்பட்ட "வேளாண் மன்னர்" போட்டியில்-1993 ஆம் 94 ஆண்டுக்ான வேளாண் மன்னர்களாகத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் ஆறு பேருக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தங்கப் பதக்கப் பரிசும், விருதும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கினார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. செம்பியன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி ஒன்றில் தேசியத் தலைவர் வேளாண் மன்னர்களுக்கு இன்றிறை வழங்கி கௌரவித்தார்.

தமிழீழத்தின் அனைத்து வளங்களையும் உச்சப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டிய சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வட தமிழீழத்தில் கடந்த கால நெற்செய்கையில் நீர்ப்பாச்சுகையின் கீழும், மழையை நம்பிய நெற் செய்கையின் கீழும் நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளிடையே "வேளாண் மன்னர்" போட்டி ஒன்றை மாவட்ட ரீதியாக நடத்திவிருந்தது

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தன.

அதன்படி போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்த போட்டியாளர்களிடையே பகுவேறுபட்ட தெரிவுகளின் கீழ்மி

(4ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை சூடு

இருவர் கொல்லப்பட்டனர்

லண்டன், மே 8

இராமேஸ்வரத்துக்கு அப்பாக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மீது கடந்த மூன்று நாட்களின் முன்னர் இலங்கைக் கடற் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய மீனவர் இருவர் கொல்லப்பட்டனர். மற்றொருவர் காயமடைந்தார்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் காயமடைந்தவரையும் இலங்கைக் கடற்படையினர் தம்முடன் கொண்டு சென்றனர்

பின்னர் கொல்லப்பட்ட இந்திய மீனவரின் அஸ்தியையும், காயமடைந்தவரையும் இலங்கைக் கடற்படையினர் நேற்று தமிழக கரையோரக் காவல் படையினரிடம் ஒப்படைத்தனர்.

புதுக்கோட்டையைச்சேர்ந்த ரவி (வயது 66), தனுவேல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மீனவர் மீதான தாக்குதலை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

வியாழனன்று தி. மு. க. நடத்தும்

சென்னை, மே 8

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 12 திகதி தமிழ் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவிருப்பதாக தி.மு.க. அறிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை மத்திய அரசின் கவனத்துக்கும் மாநில அரசின் கவனத்துக்கும் கொண்டுவரும் நோக்குடன் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மண்டேலா செவ்வாயன்று பதவியேற்பு

ஜோகன்னஸ்பேர்க், மே 8

தென் ஆபிரிக்காவின் புதிய ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாகப் பதவி ஏற்பார்.

(க)

மன்னாரில், வன்னியில் புலிகள் திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 8

மன்னாரிலும், வன்னி மாவட்டத்திலும் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய இரு வெவ்வேறு தாக்குதல்களில் மொத்தம் ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.

மன்னாரில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர்.

வன்னியில் 5 படையினர் கொல்லப்பட்டனர்.

இந்த இரு தாக்குதல்களிலும் பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்.

வவுனியா மாவட்டத்தில் 'ஜெயமஹா' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா படையினர் நடத்தி இருந்தனர்.

இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 2 வாரங்களுக்குள் புலிகளின் தாக்குதலில் தற்போது 5 படையினர் உயிரிழந்துள்ளனர்.

மன்னாரில் 2 பொலீஸார் பலி பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம் மே, 8

படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மன்னார் தீவில் பள்ளிமுனையில் அமைந்திருந்த பொலீஸ் நிலையம் ஒன்றை நேற்று அதிகாலை 12. 10 மணியளவில் விடு லைப்புலிகள் தாக்கி அழித்தனர்.

சுமார் 20 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலில் பொலீஸார் இருவர் கொல்லப் பட்டனர்.

ஏனையோர் தப்பி ஓடினர். இதேவேளை- 5 பொலீஸாரைக் காணவில்லை என்று பி. பி. ஸி. அறிவித்தது.

தாக்கி அழிக்கப் பட்ட பொலீஸ் நிலையத்தில் இருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இராணுவத்தளம் என்னும் இடத்தில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் பாலையா, லப்டன் மிக்டன் ஆகிய மாவீரர்களின் இருவரினதும் நினைவாக விடுதலைப் புலிகளால் இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்த தாக்குதலின் போது விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

10 நிமிடநேரத் தாக்குதலில் வன்னியில் 5 படையினர் பலி

யாழ்ப்பாணம். மே 8

வன்னி மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய மற்றொரு தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 6 10 மணியளவில் மணியர் காவலரணில் இருந்து தடைகளை அகற்றுவதற்காக வந்த 25 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது மணியர் காவலரணில் இருந்து 250 யார் தொலைவில் வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது

10 நிமிட நேரம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 5 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடினர். அவர்களிடமிருந்து ஆயுதங்களை பெருமளவில் புலிகள் கைப்பற்றினர்.

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ 60 மி மீ. மோட்டார் - 01
★ ரி 56 - 2 ரக துப்பாக்கி - 01

(6 ஆம் பக்கம் பார்க்க)

தங்கப்பதக்கம், சான்றிதழ் பெற்ற வேளாண் மன்னர்கள்

யாழ்ப்பாணம், மே 8

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனிடம் இருந்து தங்கப் பதக்கப் பரிசையும், பாராட்டு சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்ட "வேளாண் மன்னர்களின் விவரம் வருமாறு:-

யாழ்: மாவட்டம்

✲ திரு. கதிரவேலு சகுணராசா

இவர் சங்கானை தொட்டிவடியைச்சேர்ந்த இளம் விவசாயி. பி. ஜி. 350 இன நெல்லை பயிரிட்டு ஒரு ஏக்கருக்கு சராசரி 105 புசல் நெல்லை விளைவாகப் பெற்று யாழ்ப்பாண வேளாண் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்டம்

✲ சண்முகம் பாலேந்திரன்

இவர் கிளிநொச்சி கண்டாவளை, பண்டிசுட்டான் பகுதியைச் சேர்ந்தவர்.

பி.ஜி. 500 – 1 இன நெல்லை நீர்ப்பாச்சுகை நெற்செய்கையின் கீழ் பயிரிட்டு 165.7 புசல் நெல்லை ஒரு ஏக்கருக்கு சராசரி விளைவாகப் பெற்று கிளிநொச்சி 'வேளாண் மன்னராகத்' தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்றார்.

✲ திரு. சி. சிவஞானம்

இவர் கிளிநொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர். கிளிநொச்சியில் மழையை நம்பிய நெற்செய்கையில் ஏ.ரி. 51 இன நெல்லைப் பயிரிட்டு 174.64 புசல் விளைவினை சராசரியாகப் பெற்று வேளாண் மன்னராகத் தெரிவாகி விருது பெற்றவர்.

முல்லை மாவட்டம்

✲ திரு. கந்தையா முத்துக்குமாரு

இவர் நெடுங்கேணி இறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

ஹெமாலவ உள்ளே எடுப்பதற்காக தெற்கில் பிரேமாயுதத்தை மீண்டும் ஆரம்பிக்கிறார் போல!

வல்வை - பொலிகண்டி பகுதிகளில் பீரங்கித் தாக்கு

வல்வெட்டித்துறை, மே 8

டோரா பீரங்கிப் படகில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை வல்வை மற்றும் பொலிகண்டிப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடலில் நின்ற மீனவர்படகுகள், குடியிருப்புகள் மற்றும் வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலைப் பகுதியை நோக்கி கனிமர் தாக்குதலையும் கடற்படையினர் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக, பல மீன் பிடிப்படகுகள், கிராமவீடுகள் சேதமடைந்தன. வல்வை இந்திராணி வைத்தியசாலையின் வளாகங்கள் மற்றும் கட்டங்களும் சிறிது சேதமடைந்தன.

நேற்று அதிகாலை 5-45 மணியளவில் வடமராட்சி கிழக்குக் கடற்பிராந்தியத்தில் இருந்த புறப்பட்ட இந்த டோராப்படகு ஆழியவளை

(4ஆம் பக்கம் பார்க்க)

தென் மாகாணசபைத் தேர்தலின் பின்னர் கொல்லப்பட்டவர்கள் சடலங்கள் பொரளையில்!

மரணப்படை மீண்டும் செயற்படுவதாகத் தகவல்

கொழும்பு, மே 8

தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து "மரணப்படையினர்" அரசுக்கு பலரைக் கொன்றதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அவ்வாறு கொலை செய்யப்பட்ட பலரின் சடலங்கள் கொழும்பு, பொரளை கொள்ளுப்பிட்டி உள்ள தனிமனை ஒன்றில் புதைக்கப்பட்டிருப்பதாகவும்—

சடலங்களை எடுத்து வந்து புதைப்பதற்கு அரசவாகனம் பயன்படுத்தப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினரும் தகவல் வெளியிட்டுள்ளனர். மரணப் படையினருக்கு வதற்கான பொறுப்பு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும்—

ஒருவரிடமிருந்து தகவல் வெளியிட்ட ஒருவர் விவரம் தெரிவித்திருக்கிறார்.

வலித் அத்தனாதி முதலி உயிரோடு இருந்த காலத்தில், அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து விநியோகித்தபோது, அதற்கு இலட்சுமி விளைவித்தவர்களும் மரணப் படையைச் சேர்ந்தவர்களே என்றும் அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம் - சாவகச்சேரி

கேள்வி கூற்றுப் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் 24/3125 இலக்க இன்ரலுவல் கொறிவின் உடற்கோப்பு மீள் புனரமைப்பு செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16 - 05 - 1994 க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும் விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் 'உடற்கோப்பு மீள் புனரமைத்தல்' என குறித்து அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:
கொறியினை காரியாலய வேளைகளில் பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்.

சாவகச்சேரி ப நோ கூ. சங்கம்,
சாவகச்சேரி.
03 - 05 - 1994 [கி-8102]

சந்திரிகா ஜனாதிபதியாவதை எவரும் தடுக்க முடியாது

சுதந்திரக் கட்சி எம். பி கூறுகிறார்

கொழும்பு, மே 8

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அடுத்த ஜனாதிபதியாக வருவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. கிங்ஸ்லி விக்கிரமரத்தினா முன்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய பாதையைத் தெரிவு செய்துவிட்டதை மக்கள் தென் மாகாணத் தேர்தலில் காட்டி விட்டனர். நீண்ட காலத்துக்கு ஒரு கட்சியிடம் நாட்டின் ஆட்சியை விடக் கூடாது.

சுதந்திரக் கட்சி என்றாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சி என்றாலும் சரி 7 ஆண்டுகளுக்கு மட்டுமே பதவியில் இருக்க அனுமதிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று தெளிவான தலைமைத்துவம் கிடையாது என்றும் அவர் கூறினார்'

(ஓ-எ)

தேச விரோத சக்திகளால் டி, பியை அகற்ற முடியாது!

லங்காபுவத் அறிக்கையில் தகவல்

கொழும்பு, மே 8

ஜனாதிபதி விஜேதுங்காவை ஆட்சி பீடத்தில் இருந்து தேச விரோத சக்திகள் எவற்றாலும் அகற்றி விட முடியாது

அரசுக்குச் சொந்தமான லங்கா புவத் செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேச விரோத சக்திகள் சிவ, விஜேதுங்கா எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கத்தில் பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன என்று கூறப்படுவது முற்றிலும் ஆதாரமற்றவாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

செஞ்சிலுவை ஸ்தாபகர் நினைவு தினம் இன்று

யாழ்ப்பாணம், மே 8

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஸ்தாபகர் ஹென்றி டுனால்டின் நினைவு தினம் இன்று ஞாயிறுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைமையகம் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

காலை 8 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் இரத்ததானம் வழங்கப்படும்.

காலை 10 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க பிரபலிய கூட்டமும், அதனைத்தொடர்ந்து அங்கவீனர்களுக்கான வரைதல் போட்டி, கவிதை போட்டி, மூன்று சில்லு வண்டி, ஓட்டப் போட்டி ஆகியவை இடம்பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு வைத்திய கலாநிதி டாக்டர் த. சிங்கராஜா தலைமையில் பொதுக் கூட்டமும் பின்னர் பரிசு வழங்கல் சஞ்சிகை வெளியீடு ஆகியவையும் இடம்பெறும்.

(த-17-111-117)

சமயம், மொழிக்கு தொண்டாற்றும் பண்டிதர்களை பாராட்ட வேண்டும்

நல்லை ஆதீன முதல்வர் யோசனை

வட்டுக்கோட்டை, மே. 8

"எமது சமயத்துக்கும் எமது மொழிக்கும் அரும் தொண்டாற்றிவரும் ஆனைத்துப் பண்டிதர்களுக்கும் விழா எடுத்து ஆதரவளைப் பாராட்டுவது தமிழ் மக்களின் கடமையாகும்."

வட்டுக்கோட்டையூர் பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களைக் கௌரவித்த வட்டுக்கோட்டைத் தாகுதித் தமிழ் சங்கம் அண்மையில் நடத்திய பவள விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

முத்தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அரங்கில், பண்டிதர் க. ஆறுமுகம் தலைமையில் பவள விழா நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பண்டிதர் திரு. க. மயில்வாகனனார் கல்வியறிவாலும் வயதாலும் முதிர்ந்தவர்; ஒரு சைவப் பெரியார்; ஆசாரசீலர். அவர் ஆசிரியராகப் பணிபுரிந்த பல மாணாக்கர்களை வாழ்க்கையில் வெகு முன்னேற்றம் அடையச் செய்தவர். அவர் பல சைவசமய நூல்களையும், மாணாக்கருக்குத் துணைபுரியும் அரிய நூல்களையும் அழகு தமிழில் எழுதியுள்ளார்.

எமது நாட்டில் சைவமும், தமிழும் வளர்வதற்கும், வாழ்வதற்கும் ஆதாரமாகவும் ஊன்று சக்தியாகவும் விளங்கியவர்கள், விளங்குபவர்கள் பண்டிதர்கள், புலவர்களே. மேலும் பல பண்டிதர்கள் உருவாகவும், சமயத்துக்கும், தமிழுக்குமாக அவர்கள் உழைக்கவும் மூத்த பண்டிதர்களைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும் — என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமது உரையில் கூறியதாவது;

இறையுணர்வும் இலக்கிய உணர்வும் கொண்ட பண்டிதர் மயில்வாகனனார் பல வகைப்பட்ட சமய, இலக்கிய ஆக்கங்களைச் செய்துள்ளார். மரபுவழிக் கவி வித்துப் பண்டிதராக விளங்கும் அவர், அக்கலைக்கேற்ற வகையில் நூல்களுக்கு உரை செய்யும் பணியிலே ஈடுபட்டுள்ளார்" என்றார்.

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனப் பேராயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது—

"நமது நாட்டின் தமிழ் மரபினையும் ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனையும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் ஒரு சில அறிஞர்களில் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்களும் ஒருவர்.

விவேசர் மும்மணி மாலையும், இரட்டை மணிமாலையும் ஏனைய கவிதை நூல்களும் உரை நூல்களும் அவர் தமிழ்ச் சமுதாயத்துக்கு வழங்கிய பெருமை கொண்டவையாகும் என்றார்.

விழா ஆரம்பத்தில் வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்து விநாயகர் வழிபாடு, புரவி நடனமும் கவிஞர் கதிர் சரவணனின் பண்டிதர் புகழ்பாடும் புரவி நடனப் பாடலும் விதிகளில் இடம் பெற்றன.

யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் பவள விழா ஏட்டை வெளியிட்டு உரை நிகழ்த்தினார்.

பண்டிதர் மு. கதிரையா கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், கலாநிதி நா. சுப்பிரமணியன் உட்பட பல அறிஞர்கள் பண்டிதரின் சேவைகளைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள்.

பண்டிதர் க. மயில்வாகனனார் எழுதிய 'தமிழமுதம்' விழாவில் வெளியிடப்பட்டது. (க-161)

தேச விரோத சக்திகளால் டி, பியை அகற்ற முடியாது!

லங்காபுவத் அறிக்கையில் தகவல்

கொழும்பு, மே 8

ஜனாதிபதி விஜேதுங்காவை ஆட்சி பீடத்தில் இருந்து தேச விரோத சக்திகள் எவற்றாலும் அகற்றி விட முடியாது

அரசுக்குச் சொந்தமான லங்கா புவத் செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் முன் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேச விரோத சக்திகள் சிவ, விஜேதுங்கா எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கத்தில் பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன என்று கூறப்படுவது முற்றிலும் ஆதாரமற்றவாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

புலிகளின் குரல் வானொலியில்

08 - 05 - 1994
ஞாயிறு இரவு

★ 8-01 — இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் வீ. கே. இராஜரட்ணம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் "இலங்கை மண்" 24 ஆம் அங்கம்

09 - 05 - 1994
திங்கள் காலை

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணி ஓசை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாலாப் பாடல்கள்

மானிப்பாய்
ஆனந்தன் வைரவர் ஆலய வருடாந்த உற்சவ
இறுதி நாள் நிகழ்ச்சிகள்

காலம்: இன்று (08 - 05 - 94) ஞாயிறு மாலை 7 மணி
இடம்: ஆலய முன்றில்

நிகழ்ச்சி நிரல்

அருணகிரிநாதர் எனும் பொருள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு
நிகழ்த்துபவர்: திரு. குமாரசாமி
பட்டி மன்றம்
ஆலய வழிபாட்டிற்குத் தேவை
தொண்டா? தோத்திரமா?
சுதுமலை கண்ணன் குழுவினரின்
நாதஸ்வர தவில் கச்சேரி
யாழ் றமணனின்
ராஜன்ஸ் இசைக் குழுவினரின்
இன்னிசை கானம்

ஒலி: பத்மஸ்ரீ பண்டத்தரிப்பு
ஒளி: ஆனந்தா மானிப்பாய்

இந்து இளைஞர் மன்றம்
மானிப்பாய் வடகிழக்கு.

விளம்பர அன்பளிப்பு
ஷாப் ரேனிங் வேக்ஸ்
208, 241, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[30791]

நன்றி நவிலல்



அமரர் வேலு சண்முகம்
(உரிமையாளர், சாந்தி விலாஸ்-
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

நுவரெலியாவை பிறப்பிடமாகக் கொண்டவரும் கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய திரு. வேலு சண்முகம் அவர்கள் 03-05-1994 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எங்களின் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
தாய், தந்தை,
சகோதர, சகோதரிகள்.
மைத்துனர்.

[30789]

2ஆம் வருட நினைவஞ்சலி

தியாக தீபம்

மலர்வு: 19 — 10 — 1958
உதிர்வு: 08 — 05 — 1992

யசோதரலிங்கம் பாலகுமார்
Dip in Busi. Adm [Lon] M.B.A. Student
[Former Officer The Finance Co. Jaffna]

பொன்மனர் பெற்ற பொன்மகச் செம்மனே
நன்மலரென நாற்றிசையும்
புகழ்மணம் பரப்பிய புத்திரனே,
பாசமலரே! பண்பின்கொடியே வற்றா கவிபினூற்றே!
நேசமலராய் நின்றாய் - நாம் வாட
எங்கு நீ சென்றாய் "பாலகுமாரா"

கழியாதது ஆத்மா என்றார் - அன்பனே
என்று மெம்மோடு இணைந்திருப்பா யென்றோம்
பிரியாதது பாசம் எம்பார் - பிரியமானவனே
நீயோ எம் நினைவில் என்றும் நீதான்

மறுபிறப்பு என்றென்றும் முன்மை யென்றாக் - எங்கள்
மழலையின் வடிவில்
உன்வரவுக்காய் நாம் தவமிருந்தோம்
இறைவா நீயிருப்பது நெஜமென்றாக் - இனியாவது
இவ்வரவு ஆட்டுமென்றோம் - பதறொருநாள்
முன்னம் மழலையுந் தாங்கி எமக்கவதரித்தனை - நீதானோ?

பிரார்த்தனை:
சகோதரர்கள், அண்ணியர்,
மைத்துனர், பெறாமக்கள், மருமகன்,
உறவினர், நண்பர்கள்.

"தாயகம்"
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். [30786]

யாழ். பரியோவான் கல்லூரி
விஞ்ஞான ஒன்றியத்தின்
ஆதரவில்
ராஜன்ஸ் குழுவினர்
வழங்கும்
"இன்னிசை மாலை"
இடம்:- யாழ். பரியோவான் கல்லூரி மண்டபம்
காலம்:- 11-05-94 நேரம் பி.ப 3.00 மணி
அன்பளிப்பு:- 25/- 50/- 100/-
எல்லோரையும் தவறாது அழைக்கின்றோம்.

அன்பளிப்பு:-
முகூர்த்த பட்டுப் பிடவைகளுக்கு
பெயர்பெற்ற விநாயகம்
காவேரி சில்க்ஸ்
48 பெரியகடை. யாழ்ப்பாணம்.
(30793)

கண்ணீர் அஞ்சலி

மார்க்கண்டு சூசைமுத்து

வளாக வீதி நிருதெக்வேலியைச் சேர்ந்த கட்டடப்பந்தகாரரும் ஜீவராசாவின் அன்புத் தந்தையுமாகிய அமரர் மார்க்கண்டு சூசைமுத்துவுக்கு எனது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. ரதீகரன்
K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம். [30792]

ஹோமியோபதி மருத்துவக் கல்வி
19 - 05 - 1994 இல்
வகுப்புகள் ஆரம்பமாகின்றன

1. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஹோமியோபதி டிப்ளோமா கல்லூரிகளற்ற, இன்றுவரை ஹோமியோபதி மருத்துவ சங்கத்தின் பரீட்சையும் பதிவும் பெறாது வைத்தியத் தொழில் செய்பவர்கள் எல்லோரையும் பரீட்சைக்கும், பதிவுக்கும் உட்படுத்தும் மீட்டல் பயிற்சி வகுப்புகள்.
2. சுவாதார அமைச்சின் பாடத் திட்டங்களின் படி பரீட்சை வைப்பதற்கு அனுமதி பெற்றவர்களாக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
3. வகுப்புகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.
4. வகுப்புகள் யாவும் அங்கீகாரம் பெற்ற பரீட்சையாளரும், பதிவு பெற்ற ஹோமியோபதி வைத்திய சங்கத்தின் தலைவருமான டாக்டர் தி பரமசிவம் அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்றன.
5. விசேட அக்குபங்சர் வகுப்புகள், சீன அக்குபங்சர் சங்க அங்கத்தவரான டாக்டர் V P சுந்தரராஜன் அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்றன.
6. பதிவுபெற்ற MBBS, D.A.M.S., B.H.M.S, D.A.M. வைத்தியர்களும் வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

திபர்
சாயி மருத்துவக் கல்லூரி
இல. 6, பருத்தித்துறை வீதி, (ஆஸ்பத்திரி ஒழுங்கை)
யாழ்நகர்
[சி-8082]

31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 21 — 03 — 1972
விண்ணில்: 08 — 04 — 1994

செல்வன் திருச்செல்வம் நிர்மலன்
(யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன்)

பாசமலரே எங்குறாய்
காலங்கள் சென்றாலும் காலியமான உன்னை
சாளவும் நினைந்து சாம்பி அழுகின்றோம் - தம்பி
பாசமாய் நேசம் வைத்து வாழ்ந்ததை எண்ணி ஏங்கு
பாசமும் பரிவும் விஞ்சப் பிறந்த மண் பார்க்க - வந்தாய்
எங்கு நீ நின்றபோதும் விநாயகர் நாமம் எண்ணி
உன்னை நீ ஓர்ந்து என்றும் உருகி நின்றாய் தம்பி
ஆல விருட்சமாய் உன் நிழலில்
அனைவரும் வாழ்வோம் என்று
சாலவும் நினைந்திருந்தோம் என் அரும் தம்பி - உன்னை
மானுடம் கவர்ந்துவிட்டான் கதி இல்லை எமக்கு
உமது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்:

— குடும்பத்தினர்.

திருநாவற்குளம்,
இணுவில் தெற்கு.
(7371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர வேட்கை கொண்ட கறுப்பின மக்களின் வரலாற்று நாயகன் நெல்சன் மண்டேலா!

கறுப்பு இன மக்களின் விடுதலைப் போராட்டப் பரணி புதிய தென்ஆபிரிக்க நாட்டின் தேசிய கீதமாக ஒலிக்கிறது.

97 ஆண்டுகளுக்கு முன்னர்— 1897இல் – கறுப்பின மதகுரு இனொக் சொன் ரொங்கா இந்த விடுதலைக் கீதத்தை இயற்றினார்.

1912இல் தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அங்குரார்ப் பணக் கூட்டத்தில் கறுப்பின தேசிய கீதமாக முதன்முதலாகப் பாடப்பட்ட இந்த விடுதலைக் கீதம் —

கடந்த பல ஆண்டுகளாக கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு மலாவி, சிம்பாப்வே, சாம்பியா, நமிபியா மற்றும் தன்சானியா நாடுகளில் எல்லாம் விரு ஏற்படுத்தி வந்த இந்தக் கீதம் —

கறுப்பின மக்களின் போராட்டம் வெற்றி பெற்ற நிலையில் புதிய தென்னாபிரிக்க ஜனநாயக நாட்டின் தேசிய கீதமாக ஒலிக்கிறது.

ஒரே குரலில் இரு தேசிய கீதம்

நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை-காலை ஜனாதிபதியாக பதவியேற்க இருக்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவின் தாய் நாடுகளுக்கு தென் ஆபிரிக்க அரசு அழைப்பு அனுப்பியுள்ளது. 140க்கு மேற்பட்ட நாடுகள் அழைப்பை ஏற்றுள்ளன. இங்கிலாந்து மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் உட்பட பல நாடுகளின் ஜனாதிபதிகள், உபஜனாதிபதிகள் பிரதமர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள சம்மதித்துள்ளனர்.

இந்த நூற்றாண்டில் ஆக்கூடிய உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாக இது அமையப் போகின்றது.

மண்டேலா பதவி ஏற்பு

தலைநகர் பிரிட்டோரியாவில் உள்ள யூனியன் கட்டடத்தில் டாக்டர் மண்டேலாவுக்கு, பிரதம நீதியரசர் மைக்கல் கோர்பட் காலை 11 மணியளவில் பதவிப் பிரமாணஞ் செய்து வைப்பார்.

நிற அடக்குமுறை ஆட்சியைப் பிரதிபலித்து வந்த தேசியக்கொடி இறக்கப்பட்டு, "பல கலாசாரங்கள் – ஒரு தேசம்"- என்பதை பிரதிபலிக்கும் ஆரு நிறங்களில் அமைந்த புதிய தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறக்க, முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக 75 வயதான டாக்டர் மண்டேலா பதவியேற்பதுடன், உலகநாடுகளில், தென் ஆபிரிக்கா மீண்டும் தலை நிமிர்ந்து நிற்கப் போகிறது.

தனித்துவமான தோதல்

ஆண்மையில் நடந்து முடிந்த தென் ஆபிரிக்கத் தேர்தல் பலவகையில் தனித்துவமிக்கதாகும்.

முதலாவது, அங்கு வாழும் சுமார் 2 கோடி கறுப்பின மக்கள் தங்கள் வாழ்நாளிலேயே முதல் தடவையாக வாக்களித்தனர். ஏன், கறுப்பினத்தின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்கும் மண்டேலாவும் தனது வாழ்நாளிலேயே முதல் தடவையாக இத்தேர்தலில் தான் வாக்களித்தார்.

இரண்டாவது, நாட்டில் சரியான முறையில் கறுப்பின மக்கள் மத்தியில் வெள்ளை வெள்ளை ஆட்சியை நிற ஆட்சி பல ஆண்டுகள் நடத்தாத காரணத்தால், கறுப்பின வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது ஒருவராலுமே சரியாகக் கண்டு பிடிக்கப்பட முடியாதிருந்தது.

இதன் காரணமாக வாக்காளர் பட்டியல் இல்லாது நடத்தப்பட்ட தேர்தலாக இது அமைந்தது. இதனால் வாக்களிப்பு நடைபெற்ற நாட்களில் வாக்குச் சீட்டுகள் முடிந்ததும், திரண்டு வந்த கறுப்பின மக்கள் வாக்களிப்பதற்காக புதிய வாக்குச்சீட்டுக்களை அச்சிட்டு வாக்களிப்பதை தொடர்ந்து நடத்த வேண்டியதாயிற்று.

புதிய நாடாளுமன்றம்

தென் ஆபிரிக்காவின் புதிய நாடாளுமன்றம் 400 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது. இவர்களில் இரு நூறு பேர் தேசியத் தொகுதி வாரிப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 200 பேர் மாகாணப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

1999 ஆம் ஆண்டு முறையான பொதுத் தேர்தல் நடத்தப்படும் வரை இந்த நாடாளுமன்றம் இடைக்கால நிர்வாகம் நடத்தும். தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 5 சத வீதத்துக்கு அதிமான வாக்குகளைப் பெற்ற கட்சிகளே இடைக்கால அரசில் அங்கம் வகிக்கும் தகுதியைப் பெறும்.

புதிய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. மொத்த வாக்குகளில் 62 சத வீத வாக்குகளைப் பெற்ற இக் கட்சி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது.

தென் ஆபிரிக்காவில் வெள்ளை நிற சிறுபான்மை ஆட்சியை உருவாக்கியதும், பின்னர் அந்த ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததுமான தேசியக்கட்சிக்கு 28 சத வீத வாக்குகள் கிடைத்துள்ளன.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுக்கு போட்டியான இன்னொரு கறுப்பினக் கட்சி மங்கொசூது புத்தலேஸியின் தலைமையிலான இன்கதா சுதந்திரக் கட்சியாகும். அக் கட்சி 10 சத வீத வாக்குகளை பெற்றுள்ளது.

எனவே மண்டேலா அமைக்கும் இடைக்கால அரசில் இந்த மூன்று கட்சிகள் மட்டுமே இடம் பெறவுள்ளன. ஏனைய வெள்ளை இனத் தீவிரவாதக் கட்சிகளுக்குக் குறிப்பிட்ட அளவு வாக்குகள் கிடைக்கவில்லை.

மண்டேலா ஜனாதிபதியாக அவரின் கீழ் இரண்டு உதவி ஜனாதிபதிகள் இருப்பார். முதலாவது உப ஜனாதிபதி பதவிக்கு கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இரண்டாவது உப ஜனாதிபதி பதவிக்கு பதவிலிகும் தற்போதைய ஜனாதிபதி டி கிளேர்க்கை டாக்டர் மண்டேலா நியமித்துள்ளார்.

புதிய அமைச்சரவையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஐந்து பேர் இடம் பெற்றுள்ளனர். பாதுகாப்பு, வெளியுறவு அமைச்சர்களாக கறுப்புநிறத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலில் நாட்டின் ஒன்பது மாகாணங்களில் ஏழில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றியீட்டியது. மேற்கு கேப் மாகாணத்தை தேசியக் கட்சி கைப்பற்றியது. ஸுலு மாகாணத்தை இன்கதா சுதந்திரக்கட்சி கைப்பற்றியது.

தென் ஆபிரிக்கா எப்படி உருவானது?

தற்போதுள்ள தென் ஆபிரிக்க நாடு 1910 இல் உருவானது. இரண்டு பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளான நம்பிக்கைமுனை, நட்டால் இரண்டு முன்னாள் ஆபிரிக்கனர்குடியரசுகளான ட்ரான்ஸ்வால் மற்றும் ஓரேன்ஸ் சுதந்திர மாநிலம் ஆகியன இணைக்கப்பட்டே தென் ஆபிரிக்கா என்ற பெயரில் உருவானது.

1961ஆம் ஆண்டு வரை தென் ஆபிரிக்க யூனியன் என்ற பெயர் இருந்தது. 1961இல் அது குடியரசானது. அதனைத் தொடர்ந்து தென் ஆபிரிக்கக் குடியரசு என்ற பெயரைப் பெற்றது. பின்னர் பொதுநலவாய அமைப்பில் இருந்து தென் ஆபிரிக்கக் குடியரசு வெளியேறியது.

நாட்டின் 4 கோடி 10 லட்சம் மக்களில் 68 சத வீதமானோர் கறுப்பினத்தவர்கள். 19 சத வீதமானோர் வெள்ளை இனத்தவர். 10 சத வீதமானோர் கலப்பு இனத்தவர். 3 சத வீதமான ஆசியர்களில் பெரும்பாலானவர் இந்திய வம்சாவளி மக்களாவர்.

புதிய தோற்றம் புதிய பாதை

நிற அடக்குமுறை ஆட்சி காரணமாக உலக அரங்கில் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்த தென்ஆபிரிக்கா புதிய தோற்றம் பெற்று புதிய பாதையில் வீறுநடை போட ஆரம்பித்திருக்கிறது.

நிறம் காரணமாக — எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இருந்தும் சிறுபான்மை வெள்ளை நிறத்தவரின் அடக்குமுறைக்கு பல்லாண்டுகளாக இலக்காகி வாழ்ந்து வந்த கறுப்பின மக்கள், தென் ஆபிரிக்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

கறுப்பின மக்கள் மத்தியிலேயே பல பிரிவுகள், பல மொழிகள், பல கலாசாரங்கள் ஒரு புறம் —

போதாக்குறைக்கு வெள்ளை இன ஆட்சியை மீண்டும் நிறுவ ஆயுதக் கிளர்ச்சியை நடத்துவோம் என்று அறைகூவல் விடுத்துள்ள வெள்ளை இனத்தீவிரவாதிகள் மறுபுறம் —

மண்டேலா எதிர்நோக்கும் சவால்கள்

இவ்விரண்டுக்கும் இடையில் புதிய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் நெல்சன் மண்டேலா முன் சவால்கள் பல உள்ளன.

கறுப்பினத்தவரிடையே மத்தியில் உள்ள பல பிரிவினரிடையே மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது.

கறுப்பின மக்கள் மத்தியில் நிலவும் வேலையின்மை, வீடு, மருத்துவம் மற்றும் சமூகக் கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றுக்கு தீர்வு காண்பது.

கறுப்பின மக்கள் மத்தியிலேயே பல பிரிவுகள், பல மொழிகள், பல கலாசாரங்கள் ஒரு புறம் —

போதாக்குறைக்கு வெள்ளை இன ஆட்சியை மீண்டும் நிறுவ ஆயுதக் கிளர்ச்சியை நடத்துவோம் என்று அறைகூவல் விடுத்துள்ள வெள்ளை இனத்தீவிரவாதிகள் மறுபுறம் —

மண்டேலா எதிர்நோக்கும் சவால்கள்

இவ்விரண்டுக்கும் இடையில் புதிய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் நெல்சன் மண்டேலா முன் சவால்கள் பல உள்ளன.

கறுப்பினத்தவரிடையே மத்தியில் உள்ள பல பிரிவினரிடையே மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது.

கறுப்பின மக்கள் மத்தியில் நிலவும் வேலையின்மை, வீடு, மருத்துவம் மற்றும் சமூகக் கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றுக்கு தீர்வு காண்பது.

சவால்களை வெற்றி கொண்டு புதிய பாதையில் செல்வாரா?

— தீபன்ராஜா —

கறுப்பின வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது ஒருவராலுமே சரியாகக் கண்டு பிடிக்கப்பட முடியாதிருந்தது.

இதன் காரணமாக வாக்காளர் பட்டியல் இல்லாது நடத்தப்பட்ட தேர்தலாக இது அமைந்தது. இதனால் வாக்களிப்பு நடைபெற்ற நாட்களில் வாக்குச் சீட்டுகள் முடிந்ததும், திரண்டு வந்த கறுப்பின மக்கள் வாக்களிப்பதற்காக புதிய வாக்குச்சீட்டுக்களை அச்சிட்டு வாக்களிப்பதை தொடர்ந்து நடத்த வேண்டியதாயிற்று.

புதிய நாடாளுமன்றம்

தென் ஆபிரிக்காவின் புதிய நாடாளுமன்றம் 400 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கிறது. இவர்களில் இரு நூறு பேர் தேசியத் தொகுதி வாரிப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 200 பேர் மாகாணப் பட்டியலில் இருந்து தெரிவு

இயல்வாணி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

கறுப்பின விடுதலைப் போராட்டப் பரணி தென்ஆபிரிக்காவின் புதிய தேசியகீதம்

வெளி உலகம்

மொழி (Xhosa) 'ஹோஸா' மொழியாகும் புதிய தேசிய கீதம் இந்த மொழியிலிருந்தான் இயற்றப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்பு வைபவத்தில் புதிய தேசிய கீதத்துடன், வெள்ளை இன ஆட்சிமுறை ஆட்சியின் காலத்தில் இருந்த தேசிய கீதமும் இசைக்கப்படவுள்ளது.

அப்போது பதினைந்து இசைக்குழுக்களை சேர்ந்த ஆயிரத்து ஐநூறு பாடகர்கள் இரு தேசிய கீதங்களையும் ஒரே குரலில் இசைப்பர்.

பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ளும்படி 188 நாடுகளுக்கு தென் ஆபிரிக்க அரசு அழைப்பு அனுப்பியுள்ளது. 140க்கு மேற்பட்ட நாடுகள் அழைப்பை ஏற்றுள்ளன. இங்கிலாந்து மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் உட்பட பல நாடுகளின் ஜனாதிபதிகள், உபஜனாதிபதிகள் பிரதமர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள சம்மதித்துள்ளனர்.

இந்த நூற்றாண்டில் ஆக்கூடிய உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாக இது அமையப் போகின்றது.

மண்டேலா பதவி ஏற்பு

தலைநகர் பிரிட்டோரியாவில் உள்ள யூனியன் கட்டடத்தில் டாக்டர் மண்டேலாவுக்கு, பிரதம நீதியரசர் மைக்கல் கோர்பட் காலை 11 மணியளவில் பதவிப் பிரமாணஞ் செய்து வைப்பார்.

நிற அடக்குமுறை ஆட்சியைப் பிரதிபலித்து வந்த தேசியக்கொடி இறக்கப்பட்டு, "பல கலாசாரங்கள் – ஒரு தேசம்"- என்பதை பிரதிபலிக்கும் ஆரு நிறங்களில் அமைந்த புதிய தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறக்க, முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக 75 வயதான டாக்டர் மண்டேலா பதவியேற்பதுடன், உலகநாடுகளில், தென் ஆபிரிக்கா மீண்டும் தலை நிமிர்ந்தி நிற்கப் போகிறது.

தனித்துவமான தோதல்

ஆண்மையில் நடந்து முடிந்த தென் ஆபிரிக்கத் தேர்தல் பலவகையில் தனித்துவமிக்கதாகும்.

முதலாவது, அங்கு வாழும் சுமார் 2 கோடி கறுப்பின மக்கள் தங்கள் வாழ்நாளிலேயே முதல் தடவையாக வாக்களித்தனர். ஏன், கறுப்பினத்தின் முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்கும் மண்டேலாவும் தனது வாழ்

உலகில் பாம்புக்கடியினால் இறப்போர் எண்ணிக்கை இலங்கையிலேயே அதிகம்

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய கலாநிதி ஆனந்த ராணி அரியரத்தினம் பாம்புக்கடி சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். அவர் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்தபோது அளித்த பேட்டி விவரம் கட்டுரைவடிவில் கீழே தரப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் பாம்புக்கடி மரணங்களில் பர்மாவே முதலாம் இடத்தை வகித்தது அப்போது இலங்கை மூன்றாவது இடத்தில் இருந்தது.

ஆனால் 1990ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் இலங்கையே முதலாவது இடத்தை வகிக்கிறது.

பாம்புக்கடி மரணங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் மூன்றாவது உலக நாடுகளைப் பொறுத்தவரை ஒரு சவாலாகவே கருதப்பட்டு வருகின்றன. இதற்கு முக்கியகாரணம் இதுபற்றிய அறிவு மக்களுக்குப் போதாமை ஆகும்.

ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடான அமெரிக்காவில் வருடம் 12 பேர் அளவிலேயே பாம்புக்கடியினால் மரணம் அடைகிறார்கள். இலங்கையில் 92 இனப்பாம்புகள் உண்டு. இவற்றில் 5 இனப்பாம்புகளே கூடிய நச்சுத்தன்மை உடைய பாம்புகள் ஆகும்.

உலகில் 2,700 பாம்பு இனங்கள்

உலகில் 2,700 இனப்பாம்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் 500 இனப்பாம்புகளே பல் முனுக்கு உள்ள அதிக நச்சுத்தன்மை வாய்ந்த பாம்புகள்.

உலகில் உள்ள பாம்புஇனங்களை நான்கு குடும்பங்களாக வகுக்கலாம் அவையாவன:

★ இலப்பிடே [Elapidae]

★ வைப்பெரிடே [Viperidae]

★ ஹைரோபிடே [Hydrophiiidae)

★ கொலுபிரிடே (Coiubridae)

இலப்பிடே

இந்த குடும்பத்தைச்சேர்ந்த இனப்பாம்புகள் கடித்தால் அதன் நஞ்சு நரம்புகளையே (Neurotoxin) பாதிக்கும். சிறுநீரகம் பாதிக்கப்படமாட்டாது.

உதாரணமாக: நாகபாம்பு (Cobra) எண்ணெய் விரியன் (Ceylonkrait) எட்டடி விரியன் (Indiankrait) ஆகியவை இலப்பிடே குடும்பத்தைச் சேர்ந்தவை. எட்டடி விரியன் கடித்தால், கடியுண்டவர் 8 அடிகள் எடுத்து வைக்க முன்னர் மரணம் அடைகிறார். இவப்பிடே குடும்பத்தைச் சேர்ந்தவை தரைப் பாம்புகள் ஆகும்.

வைப்பெரிடே

வைப்பெரிடே குடும்பத்தை சேர்ந்த பாம்புகளே உலகில் அதிகமாகப் பரவி உள்ளன. புடையன் பாம்பில் இரு வகைகளான True Viper, Pit Viper மற்றும் கண்ணாடி புடையன் (Russels Viper) சுருட்டைப்புடையன் (Saws-caled Viper) ஆகியவை இந்த குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த புடையன் பாம்பு இனமான Pit Viper வெப்பத்தை அறியக்கூடிய சக்தி கொண்டது.

கண்ணாடிப் புடையன் பர்மாவில் அதிகம் உண்டு. இந்த குடும்பத்தைச் சேர்ந்த பாம்புகளினால் கடிபடுபவர்களுக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுகிறது.

ஹைரோபிடே

ஹைரோபிடே குடும்பத்தைச் சேர்ந்தவை கடல் பாம்புகள் ஆகும்.

மலேசியா, தாய்லாந்து, மேற்குப் பசுபிக் கரைகளில் இந்த குடும்பத்தைச் சேர்ந்த பாம்புகள் அதிகமாக உள்ளன.

இலங்கையில் பாக்கு நீரிணைப் பகுதியிலும் முல்லைத்தீவுக்கு அருகாமையிலும் இவை காணப்படுகின்றன. இலங்கையில் 13 இன கடல் பாம்புகள் உள்ளன.

கடல் பாம்பு தீண்டும் போது மனிதனின் தசைப் பகுதியே (Myotoxic) பாதிக்கப்படுகிறது. ஆனால் ஆஸ்திரேலியாவில் உள்ள தரைப் பாம்புகளும் தசையையே பாதிப்பதால் அவையும் ஹைரோபிடே குடும்பத்துக்குள்ளே வருகின்றன.

கொலுபிரிடே

இந்த குடும்பத்தைச் சேர்ந்த பாம்புகளே இலங்கையில் அதிகமாக உள்ளன. சாரை பறக்கும் பாம்பு நன்னீர் பாம்பு ஆகியவை கொலுபிரிடே குடும்பத்தில் அடங்குகின்றன.

இந்த குடும்பத்தைச் சேர்ந்த பாம்புகளை மரங்களிலும், நீரிலும் காணலாம். இவற்றின் பல்லு பின்னுக்கு வளர்ந்திருப்பதால் இவை கடித்தாலும் நஞ்சு உள்ளே செல்லாது.

நஞ்சு உள்ள பாம்புகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அவையாவன

★ அதிக நஞ்சு உள்ள பாம்புகள்.

★ ஓரளவு நஞ்சு உள்ள பாம்புகள்.

★ குறைந்த நஞ்சு உள்ள பாம்புகள்.

அதிக நஞ்சு உள்ள பாம்புகள்

அதிக நஞ்சு உள்ள பாம்புகள் கடிக்கும் போது அவை மரணம் ஏற்படுகிறது.

உதாரணமாக,- நாகபாம்பு கண்ணாடிப்புடையன், சுருட்டைப் புடையன், எண்ணெய் விரியன், எட்டடி விரியன் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சுருட்டைப் பாம்பு ஆபத்துக் கூடியதாக உலகில் கருதப்பட்டாலும் இதனால் இலங்கையில் மரணம் ஏற்பட்டதற்கான பதிவுகள் எதுவும் இல்லை. இலங்கையில் இவை. கொழும்பில் யா-எல பகுதியிலும் இலங்கையின் வடக்கு – கிழக்கு பகுதிகளிலுமே அதிகமாகக் காணப்படுகின்றன. சுருட்டைப் பாம்புகள் பகலில் திரியக் கூடியவை. அதிக இனப்பெருக்கம் உள்ள பாம்புகளில் இவையும் அடங்கி உள்ளன. நினைத்துக்கு ஏற்ப நஞ்சின் தன்மை மாறுபடலாம். ஆதலால் இலங்கையில் உள்ள சுருட்டைப் பாம்புகளின் விஷம் குறைந்தவையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஓரளவு நஞ்சுள்ள பாம்புகள்

உதாரணமாக மூக்குப் புடையன் (Hump Nosed Viper) பச்சைப் பாம்பு (Green Pit Viper) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்த இனப் பாம்புகள் கடித்தால் நிச்சயம் மரணம் ஏற்படாது. இவை மோசமாகக் கடித்தாலேயே மரணம் ஏற்படும்

குறைந்த நஞ்சுள்ள பாம்புகள்

சாரைப் பாம்பு (Bogia), பறக்கும் பாம்பு (Flying Snake) ஆகியவை இவற்றுள் அடங்குகின்றன. இவை கடிக்கும் போது நஞ்சுப் பாதிப்பு மிகவும் குறைவாக இருப்பதால் இறப்பு ஏற்படுவதில்லை.

பாதிப்புகள்

பாம்புக் கடியினால் ஏற்படும் பாதிப்பு பாம்புக்கு ஏற்ப வேறுபடுகின்றது.

★ புடையன் பாம்பு கடித்தவர்களுக்கு இரத்தப் பெருக்கு [Bleeding Tendency] ஏற்படுகிறது சிறுநீர் கழிக்கும் போதும் வாந்தி எடுக்கும் போதும் இரத்தம் வரும்.

★ கடல் பாம்பு கடிப்பவர்களுக்கு தசைப்பகுதி பாதிக்கப்படுகிறது.

★ விஷம் குறைந்த பாம்புகளான சாரை முதலியவை கடிக்கும்போது கடித்த இடத்தில் வீக்கம் ஏற்படுகிறது.

இலங்கையில் பாம்பு மரண அதிகரிப்பு ஏன்?

நுண்ணிய வித்தியாசங்களினாலேயே பாம்புகள் இனம் காணப்படுகின்றன அதற்கு நிபுணத்துவம் (Herpetolo Gist) தேவை.

இருட்டிலும், பதிறைகளிலுமே பலர் பாம்புகளைக் காண்பதால் அவற்றை இனம் காணும் அறிவு அவர்களுக்கு இருப்பதில்லை.

நாகபாம்பு வீடுகளுக்குள் வந்தால் சிலர் கொல்வதில்லை. மூடநம்பிக்கையே இதற்குக் காரணம்.

ரோஹப்புறங்களில் பாம்பினால் கடியுண்டவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுவதில்லை. சிலர் மாந்திரீகர்களை நாடி நேரத்தை வீணடிக்கிறார்கள். பாம்பினால் கடியுண்டவர் எத்தனை வசனங்கள் கதைக்கிறாரோ அதனைக் கணக்கிட்டே கடித்த பாம்பு இனத்தை மாந்திரீகர் தெரிவிக்கிறார் என்று கூறப்படுகிறது.

தடுப்பு முறைகள்

95 சதவீதமான பாம்புக் கடி தோட்டங்களிலேயே ஏற்படுகிறது. காடுகள் அல்லது பற்றைகளுக்குள் செல்லும் போது காலுக்கு பூட்ஸ் அணிந்து செல்லலாம். அல்லது காலை முடி நீண்டு இருந்து எரிகிறது. பாம்புகள் அதிகமாக உள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகள் காவலுக்கு காலம் தடுப்பூசி ஏற்றிக் கொள்வது மூலம் பாம்பின் நச்சுத் தன்மைப் பாதிப்பில் இருந்து விடுபட முடியும்

இந்த ஆராய்ச்சி வெற்றி அளிக்குமானால் இலங்கை உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பாம்புக் கடி மரணத்தைப் பெருமளவு குறைக்க முடியும். ★

உரிய நேரத்தில் சிகிச்சை அளித்தால் பெருமளவு மரணங்களைத் தவிர்க்கலாம்

போதிய பலன் அளிக்காத இந்திய விஷ தடுப்பு மருந்து

பாம்புகளின் நச்சுத் தன்மை தரைக்குத் தரை வித்தியாசமடைகிறது. ஒரே இனப்பாம்புகளில் இந்தியாவிலும் இலங்கையிலும் மாறுபட்ட தன்மைகள் காணப்படுகின்றன

இதனால் தான் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பாம்பு விஷத் தடுப்பு ஊசி மருந்து எதிர்பார்த்த பலனை அளிக்கத் தவறி விடுகின்றன.

பம்பாயில் உள்ள ஹாஃபகின் நிறுவனம் (Haffkine Institute) மற்றும் சீரம் நிறுவனம் (Serum Institute) ஆகியவற்றில் இருந்தே இலங்கை விஷத் தடுப்பு ஊசி மருந்தை [Anti Venom] வாங்குகிறது.

பாம்பு விஷத்தை வெளியே எடுத்து எலிகள், முயல்கள், குரங்குகளுக்கு ஊசிமூலம் செலுத்துகிறார்கள். உடனடியாக இந்த பிராணிகளின் உடலில் விஷ எதிர்ப்புத் தன்மை உருவாகிறது. இவற்றைக் கொன்று இவற்றின் இரத்தத்தை எடுத்தே விஷத் தடுப்பு மருந்து தயாரிக்கப்படுகிறது

இந்தியாவில் உள்ள பாம்புப் பண்ணைகளில் இருந்தே விஷத்தை எடுத்து இந்த இரு நிறுவனங்களும் விஷத் தடுப்பு மருந்துகளைத் தயாரித்து இலங்கைக்கு அனுப்புகின்றன.

விஷத் தடுப்பு மருந்து கூடிய பலனை அளிக்க வேண்டுமானால் இலங்கையிலேயே இதனைத் தயாரிக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள பாம்புகளைக் கொண்ட பாம்புப் பண்ணை (Snake Farm) ஒன்றை இலங்கையில் நிறுவ வேண்டும். இந்தப் பண்ணையை அமைத்து ஆய்வுகூட நிபுணத்துவ வசதிகளை ஏற்படுத்தும் போது பெரும் செலவிலான ஒரு திட்டமாக இது அமையும்.

பேட்டி கண்டவர்: என். பி. சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஒரு கிழமை நிரம்பிய வெலுவைக் குஞ்சுகள் [அழகிய பொன்நிற தாராக்குஞ்சுகள்], வான் கோழிக் குஞ்சு விற்பனைக்குண்டு. N. ரமேஷ், C/o K. நித்தியானந்தன், சித்தன் கேணி [கப்பர்சொவிக் அடித்த இடம்]. [30777]

18 விவரணப் படங்களுடன் கூடிய கைரேகை சாத்திரப் புத்தகம் விற்பனைக்கு உள்ளது. எழுதியவர்: றோமன் கிறிஸ்ரோ சற்றஜி 1907ஆம் ஆண்டுப் பதிப்பு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திரு. ரி. சரவணமுத்து, 'நிலா மகால்', 1ஆம் கட்டை, உடுவில். [30779]

வையர் கினால், மேசை, கதிரை, செற்றி விற்பனைக்கு உண்டு. செ. செல்லத்தம்பி, நீதிமன்ற ஒழுங்கை, மல்லாகம். (7087)

பொமரேனியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 265, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் பி.ப. 2 மணிக்குப் பின். [30782]

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 698/15, தலையாழி, சப்பாத்தி வீதி, யாழ்ப்பாணம். (30759)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பூசி போட்ட இரண்டரை மாத Golden Comet கிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30718)

கார் விற்பனைக்கு

வொக்ஸ்வேகன் (Volkswagen) ஓடக்கூடிய நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. சபா விற்பனை நிலையம், அச்சுவேலி. (30738)

ஆடு விற்பனைக்கு

ஒறிஜினல் சனல் ஆடுகள் விற்பனைக்குண்டு. நாலரை மாத சினை ஆடும் உண்டு. தொடர்பு: குமாரசாமி ஸ்ரோர், இல. 12, கனகசபை லேன், (யாழ். இந்துக் கல்லூரி பின்புறம்), யாழ்ப்பாணம். (30685)

பயிற்சி விரைத்தாள்கள

A/L, O/L ஆண்டு 5 புலமைப்பரிசில் 3, 4, 5, 6, 7, 8, 9, 10 வகுப்புகளுக்கான ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்ற பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள், ஆசிரியர்களுக்கு விசேட கழிவுண்டு Bond, யாழ்ப்பாணம். (7365)

O/L கணிதம் - 94

Distinction, Credit பெறுபேறடைவதற்கும் இதுவரையும் சித்தியடையாதோருக்கும் ஆண்டு 9, 10 உட்பட கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc. இல 85, சிவன்கோயிலடி, திருநெல்வேலி (30769)

திருமணச்சேவை

உள்நாடு வெளிநாடு மணமகன், மணமகள் ஜாதகம் உள்ளவர்கள் தொடர்பு கொள்க. "ஆபிராமி", துர்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி 30750

தேவை

திருநெல்வேலியில் இயங்கி வரும் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேயிங் தைப்பதில் நல்ல அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும், பெண்களுக்கான நவீன ஆடைகள் வெட்டுவதிலும், தைப்பதிலும் நல்ல அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை. 16 05-94க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 640, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (30785)

மணமகன் தேவை

கனடாவை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்டவர், ஆங்கில அறிவுள்ள, அழகுள்ள, நற்குணமுள்ள இந்து மத பெண்ணை வீட்டார் தேடுகின்றார்கள். மேற்படி தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 31, மே/பா உதயன் சேவை நிலையம், 82, K.K.S. றோட், கல்லாகம். (7088)

38 வயது, விசாகம் 3ஆம் பாதம் 10இல் செவ்வாய் பாவக் கிரகம் 55, ஜேர்மனி வீஸா யாழ். உள்ளவருக்கு அழகிய, படித்த பெண் தேவை. ப. பரராசசிங்கம், கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30743)

தவறிவிட்டது

எனது முக்கியமான கணக்குத்தண்டுகள், வரைபின் வரித்தண்டுகள் அடங்கிய கடித உறை பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுகூர்ந்து கந்தரமடம், 13, பஸ் நிலையம், யாழ்நகர் முகவரியில் கொடுக்கவும். சண்மாஸ்ரர் (சண்முகலிங்கம்). (30774)

(O/L) MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 27வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கல்லடிக்குளி. (7370)

ஜோதிடம்

எத்தனையை தீராத கஷ்டங்கள், விவாகத்தடை, கல்வித்தடை, தொழிற்தடை தீர சாதகத்துடன் வரவும். பன்னாவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீமாலை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு (30763)

சனிநீராடு

ஒலிவ் ஸ்நானப்பவுடர் சுகந்தமானது, தோற்றெடுத்த சரக்குகள், மூலிகைகள் கொண்டு தயாரித்தது. சிரசுக்கும், உடம்புக்கும் இதம் அளிப்பது. உச்சப் பயனுக்கு கொதிநீரில் ஊறவைத்துப் பாவிக்கவும். பக்கற் விலை ரூ. 3/-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூ. 60/-. அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. 'மிக்கிலவி' (சி-8113)

கோழி வளர்ப்போருக்கு

புதிய ஓரளவு பாவித்த கோழித்தீன் இசத்து, தண்ணீர்தாங்கி, வயர்நெற் என்பன மிகவும் மலிவான விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். சி. சதாகரன், 'லீலா பதி', கல்டிறோட், மிருசுவில் (ஆஸ்பத்திரிக்கு அருகில்). (30787)

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 – 10 – 1962

மறைவு: 03 – 05 – 1989

நாகராஜா தெய்வேந்திரன்

(ஊர்காவற்றுறை)

(யாழ். யங்ஸ்லைக்கழக விஞ்ஞானபீட மாணவன்)

சிதி: 08 05 1994

மங்கள விளக்கே மனை பூர்க்கும் – உன்
சங்கமச் சிரிப்போ சபை ஏற்கும்
எங்களின் அடிப்போ உனைத் தேடும் – தினம்
ஏங்கித் தவிக்கின்றோம் தரணியிலே.

கண்ணாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்:
தந்தை தாய். தம்பிமார்,
தங்கைமார். உற்றார்,
உறவினர்கள்.

நக்கீரா வீதி.
கல்லடிக்குளி. (30761)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 – 09 – 1945

மறைவு: 19 – 04 – 1993

அமரர் ஏரம்பு தனபாலசிங்கம்

(10ஆம் வட்டாரம் - புங்குடுதீவு)

சிதி: 08 – 05 1994

அன்புத் தெய்வமே! அணையாத தீபமே! பண்பின் சிகரமே! எங்கள் குடும்ப ஒளி விளக்கே! எம்மை பண்போடும், பாசத்தோடும் வாழ வைத்த அன்புத் தெய்வமே! ஆளாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய இந் நாளில் பிரார்த்திக்கிறோம்.

– குடும்பத்தினர்

30/2, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (30788)

31ஆம் நாள் நினைவு



மலர்வு: 12 – 07 – 1922

உதிர்வு: 08 – 04 – 1994

அமரர் மாரிமுத்து கனகசபை

(சரஸ்வதி புத்தகசாலை - சாவகச்சேரி)

இறைவடி சேர்ந்த எமது தலைவனின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (08 05-1994) ஞாயிறு முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் கலந்து அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து மகிழ்ச்சியான தீர்த்தமும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மகள்,
மருமகன், பேரன்.

சிவன் கோயிலடி,
சாவகச்சேரி. (சி-8111)

31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 08 – 07 – 1914

உதிர்வு: 08 – 04 – 1994

திருமதி இராசபிள்ளை சின்னத்தம்பி

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயும், எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாயும் விளங்கிய எமது குலதெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

கந்கர்மடம்,
யாழ்ப்பாணம். (30754)

45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சந்தையர் கனபதிப்பிள்ளை

(3ஆம் வட்டாரம் - புங்குடுதீவு)

மலர்வு: 25 06-1931

உதிர்வு: 25-03-1994

சொர்க்க துக்கமென்றோ சென்றீர்கள்!
பாவம் நாங்கள் ஏதும் செய்ததுண்டோ பரமா-
ஐயா!
பொறுக்குதில்லை எம் மனது பொங்கிவரும்-
கண்ணீரால்!
கருணைமான உங்கள் முகம் உலகினிற் காண்போமோ!
இரக்க மனதுடனே இராப்பகலாய் ஏங்குகின்றோம்!
மறக்கமுடியவில்லை மறுபிறப்பாய் வாரும் ஐயா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

க. கதிரவேலு,
16/8, சீனியர் லேன்,
(ரேஸ்கோர்ஸ் லேன் அருகில்),
யாழ்ப்பாணம். (30773)

விற்பனைக்கு

மரவள்ளித்தடி விற்பனைக்கு உண்டு

(பார்வையிட விரும்பின் காலை 8 மணிக்குமுன் வரவும்)

க. பாலசிங்கம்,
351, கோயில் வீதி, நல்லூர்.
(கம்பன் கழகம் முன்பாக)

(சி/8080)

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம் - சாவகச்சேரி
வாடகை லொறி பெறுவதற்கான கேள்விக் கூற்று பெறல்

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் இடங்களில் சேவை புரிவதற்கு விரும்புபவர்களிடம் இருந்து கூறு விலை கோரப்படுகின்றது. விரும்புவோர் 16 – 05 – 1994 க்கு முன்னதாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், ப.நோ. கூ. சங்கம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

1. சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம் — பருத்தித்துறை துறைமுகம்
2. சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம் — யாழ். களஞ்சியம் யாழ்ப்பாணம்
3. சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம் — கோண்டாவில் களஞ்சியம்
4. சாவகச்சேரி ப.நோ. கூ. சங்கம் — கிளை நிலையங்கள்

குறிப்பு:
சகல கிளை நிலையங்களும் சங்கத்தில் இருந்து 05 கிலோ மீற்றர் தூரம் வரையில் உள்ளது.

■ பொது முகாமையாளர்.

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்,
சாவகச்சேரி.
03 – 05 – 1994 [சி-8000]

மிருதங்கக் கலைஞர்
திரு. T. பாக்கியநாதன்
அவர்களுக்கான
நிதியுதவிக் கலை நிகழ்ச்சி

வயலின் இசை

வயலின்	—	சு. கோபிதாஸ்
மிருதங்கம்	—	க. கண்ணதாஸன்
கடம்	—	சதா. வேல்மாறன்
தபேலா	—	ஏ. மயூரன்

திரிகூடராசப்பக் கவிராயரின்
"குற்றாலக் குறவஞ்சி"
(நடன நாடகம்)

நடன அமைப்பு	—	சாந்திநி சிவசேகர்
இசையமைப்பு	—	வரீன. ராமேஸ்வரன்
தயாரிப்பு	—	சிவஞானம் ஜெயசங்கர்

இடம்: இளங்கலைஞர் மன்ற கலா மண்டபம்

காலம்: **09-05-94** திங்கள் மாலை 5மணி
(17 – 04 – 1994 அன்று நடைபெற இருந்த நிகழ்ச்சி)

அன்பளிப்பு: **250/- 100/- 50/-**

[சி-8081]

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
EXTERNAL EXAMINATION-1992/93

FIRST IN ARTS: 1992
FIRST IN COMMERCE

Examination Entry forms will be received from registered candidates, who wish to sit the above examination scheduled to commence in August/September 1994

Examination Entry forms could be obtained from the External Examinations and Registration Unit University of Jaffna in person or by post from 9/5/1994.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Manager People's Bank located in theUniversiity of Jaffna for the the payment of Rs. 15/-. Those who wish to obtain the forms by post are required to send a money order/postal order for 15/- drawn in favour of Bursar. University of Jaffna together with a self addressed envelop affixing stamp to the value of Rs 12/-

Completed Examination Entry forms should be submitted to the External Examinations & Registration Unit on or before 15-06-1994.

— REGISTRAR.

University of Jaffna. [C-8112]

நன்றி கூறல்

பல மாதகாலமாக நிறுத்தப்பட்ட புகையிரத கடலை ஊழியர்களின் சம்பளத்தை வழங்கிய கனம் பேராக்குவாதிகளுக்கு அமைச்சருக்கும் எமது கோரிக்கைக்கு கருணையுடன் செவிமடுத்து சம்பளத்தை பெறுவதற்கு முழுமுயற்சி செய்த மதிப்புக்குரிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் அவர்களுக்கும் யாழ். மாவட்ட புகையிரத கடலை பொறுப்பாளர் திரு. ராஜரெத்தினம் அவர்களுக்கும் யா/மாவட்ட புகையிரதக் கடலை ஊழியர்களாகிய நாம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/மாவட்ட
புகையிரதக் கடலை
ஊழியர்கள்

[30784]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
1931, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

தேர்தலுக்கு முன்னர் வடக்கில் அமைதி உருவாக யுத்த நிறுத்தம் செய்ய அரசாங்கம் பின்னிற்பதேன்?

தவிர்க்முடியா இன்னொரு போர்!

தமிழினத்தின் விடுதலைக்காக இன்று இரத்தம் சிந்திப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் இன விடுதலை என்பது வெறுமனே ஒரு மொழியைப் பேசுகின்ற இன மக்களின் விடுதலை மட்டுமன்று. உண்மையில் அந்த அந்த மொழிக்கும் யதார்த்த பூர்வமான விடுதலையைப் பெற்றுத் தருவதாகவும் இருக்க வேண்டும்.

எனவே எமது போராட்டம் எமது இனத்தின் விடுதலையோடு மொழியின் விடுதலையையும் சேர்த்ததே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சில நூற்றாண்டு காலமாக — எமது தாய்மொழி ஆதிக்கம் செலுத்திய — அந்நியர்களினால் எமது உரிமைகள் பறிக்கப்பட்டு, மறுக்கப்பட்டது போல —

கடந்த பல நூற்றாண்டுகளாக எம்முடன் ஒட்டி உறவாடி ஆதிக்கம் செலுத்திய அந்நியர்களினால் — அவர்களின் மொழிகளின் ஊடுருவல்களினால் — எமது தாய் தமிழ் களப்புற்று, செந்தமிழ் மறைக்கப்பட்டுள்ளது.

அந்நிய மொழிச் செழும்பு எமது செந்தமிழ்ச் செம்பின் மீது படர்ந்து, அதன் துலக்கத்தை மழுங்கடித்து நிற்கிறது.

எமது இனத்தின் விடுதலைக்கான போராட்டம் ஒரு புறம் நடக்க — அதனுடன் சேர்ந்து — எமது மொழியை தூய்மைப்படுத்தி அதன் செம்மை நிலைக்கு அதனைத் திரும்ப வேண்டிய மொழிப் போரும் மறுபுறத்தில் நடக்க வேண்டும். அந்நிய மொழிச் செழும்பை நாம் துடைத்தெறிய வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் வீரர்கொண்டு நிற்கும் வேங்கைகள் இது விடயத்தில் அதிக கரிசனை காட்டி நிற்பது வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரியதும் ஆகும்.

பிரெஞ்சு மொழியில் சரியான வார்த்தை ஒன்று இருக்கும்போது அதனைப் பயன்படுத்தாது அதற்குப் பதிலாக ஆங்கிலத்தைப் பகிரங்கமாகப் பயன்படுத்துபவர்களுக்கு கடும் அபராதம் விதிக்கும் சட்டமூலம் ஒன்றை — அன்றாட நடவடிக்கைகளில் பிரெஞ்சு மொழிக்கு முக்கியத்துவம் வழங்கும் சட்டமூலம் ஒன்றை — பிரெஞ்சு நாடாளுமன்றம் நிறைவேற்ற இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழியைத் தூய்மைப்படுத்துவது என்பது ஆட்சியில் — அதிகாரத்தில் — இருப்பவர்களின் அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டால் தான் வெற்றியளிக்க முடியும் என்பது அனுபவம்.

அந்த வகையில் தமிழீழத்தில் செந்தமிழ் நிலைபெறுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் என்பது அனைவரதும் நம்பிக்கை.

ஆனால் —

"அடிமேல் அடிஅடித்து" அம்மியை நகர்த்துவது போன்ற சிரமமான பணி இது.

இந்தப் பணியில் பல நெருக்கடிகள் வரும்; எதிர்ப்புகள் வரும்; குழப்பங்கள், சலசலப்புகள் வரும் — அவற்றைக் கண்டு குழம்பக் கூடாது! ஆத்திரப்படக் கூடாது; அவசரப்படக் கூடாது.

பணிவோடு மக்களை அரவணைத்து, அன்னம் பிரிந்து ஊட்டும் அன்னையைப்போல, தூய தமிழை மக்களின் மொழிப் பிரயோகத்தில் ஊட்டி செந்தமிழை நிலை நிறுத்த வேண்டும்.

வழக்கத்தில் உள்ள சொற்களை ஒதுக்கிப்பாய்ந்து, கலப்புகளை அடையாளம் கண்டு விலக்கி, அவற்றுக்குப் பதிலாக தூய தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடிப்பது முதற் பணியாக வேண்டும்.

பிறகு கண்டுபிடித்து சொற்களை மெல்ல மெல்ல மக்களிடை பழக்கப் பிரயோகத்துக்கு கொண்டு வரவேண்டும்.

எவ்வாறேனும் தூய தமிழைப் பயன்படுத்தி அதன் பெருமையைப் பேணவேண்டும் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டும். வழக்கில் வந்ததை மாற்றுவது கடினம்தான்.

அதனை மாற்றுவதற்கு தமிழர்கள் தாமே தம்முடன் போராட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதுவும் விடுதலைப் போராட்டத்தைப் போலவே தவிர்க்கமுடியாத ஒன்று.

நிமிடத்துக்கு நிமிடம் மாற்றம் அடைவது தான் அரசியல் என்றாகி விட்டது. அந்த மாற்றம் நிச்சயமாக மக்களின் நன்மைக்காக அல்ல. மக்கள் தமது பிரதிநிதிகள் என்று தெரிவு செய்த அரசியல்வாதிகளின் நன்மைகளையும், வசதிகளையும் கருதியே அந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

அரசியலில் தமக்கு போட்டியாக நிற்பவர்களுக்கு ஆதரவு குறைந்தோ அல்லது அவர்கள் வேறு வகைகளால் பலவீனமுற்றோ இருக்கும் போது அதனைப் பயன்படுத்தி தாம் முன்னுக்கு வரவும், வளரவும் தமது பதவியை உறுதி செய்து கொள்ளவும் அரசியல்வாதிகள் தயங்குவதில்லை.

தென்னிலங்கை அரசியலில் அதனை அடிக்கடி கண்ணாரக் காணலாம். தென்மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், மக்களின் ஆதரவு தங்களுக்கே உண்டு என்று ஆளுங்கட்சியினர் நினைத்திருந்தனர். அவ்வேளையில் — ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் உரிய காலத்திற்கு முன்னரே இந்த மே மாதத்திலேயே - வைகாசி பண்டிகை முடிந்த கையோடு நடத்துவது என்ற எண்ணம் அரசுக்கு இருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்களும், மோதல்களும் மலிந்திருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேர்தல்களை நடத்தினால் மக்கள் இருந்தால் மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களையும் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செய்து அதிக நன்மை பயனைப் பெறலாம் என்ற கருத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி பொய்ப்பித்துவிட்டது.

தொடர் ஆட்சியில் சர்வாதிகாரம், மேனிலாரப் பிரபுத்துவம், லஞ்சம், ஊழல், மோசடி, கொலைகள், கோரத்தனம் என்று மனிதக் கொடுமைகள் மலிந்துவிட்டன. இத்தனைக்கும் 17 வருடத் தொடர் ஆட்சிக்கு முன்று போர் தலைமை வகித்தன".

நாடாளுமன்ற பெரும்பான்மை கூட மூன்றில் இரண்டு என்ற நிலையிலிருந்து அரைவாசிக்கும் குறைந்தது. எனினும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அவர்களது வாழ்க்கை நிலை உர உயர்த்த வேண்டும் என்ற சிந்தனையைவிட, அரசியல்வாதிகள் தங்கள் சுகநலன்களிலும், தங்களுக்கு வசதியான வாழ்க்கையைத் தேடுவதிலுமே, தமது பதவிகளைத் தக்கவைப்பதிலுமே முழுக்கவனத்தையும் செலுத்தினர்.

அண்மையில் பொழும்புப் பத்திரிகை ஒன்றில் அரசியல்வாதிகள் குறித்து வெளியான கருத்துப்படம் மிகவும் பொருத்தமானதாக இருந்தது. ஒட்டிய உடலும், உலர்ந்த வயிறுமாக அரசியலில் பிரவேசிக்கும் ஒருவர், தொந்தியும், சள்ளையும், வளத்தில் தலைவர் றெட்டோரோவை ராஜினாமாச் செய்ய "உத்தரவிட்டு" வளர்ந்த சரத் முனுசிங்கவை நியமித்திருக்கிறார். ஜே.ஆர். அரசில் விஜேதுங்கா கல்வி துறை அமைச்சராக இருந்த போது தலைப்பகுதி இயக்குநராக இருந்து பின்னர் கல்வி அமைச்சின் செயலாளராக உயர்ந்தவர் சரத்.

இவரைத் தொடர்ந்து ஜே. ஆர். அரசில், கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளராக இருந்த வனிநிதி

அரசியல்

விக்கிரம வீரசூரியா நிதி அமைச்சின் செயலாளராகவோ, ஜனாதிபதியின் உதிரியோசனையோ ஆலோசகராகவோ நியமிக்கப்படலாம் என்று அறிய வருகிறது.

தேர்தல் பிரசார உத்திகளை வகுப்பதிலும் அதற்கான உரிய முறையில் செயற்படுத்தி, நல்ல பெறுபேறுகளை ஈட்டுவதிலும் திறமைசாலி எனப் பெயர் பெற்றவர் வீரசூரியா. காமினி திசாநாயகாவை அமைச்சராகவும் அவரது அமைத்தனர் வீரசூரியா ஆஸ்திரேலியாவிலிருந்து ஸ்ரீலங்காவுக்குப் பறந்து வருவார்.

ஒரு கல்லி இரு மாங்காய்கள்

அமைச்சரவை மாற்றத்தின் போது காமினியுடன், ஹேமா

நாடாளுமன்ற தேர்தலை முதலில் நடத்தி வெற்றியை உறுதி செய்யத் திட்டம்

ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் வெல்லும் என்ற நம்பிக்கையினாலேயே அரசு அவ்வாறு சிந்தித்தது.

சுதந்திரக் கட்சிக்குள் குழப்பங்காய்ச்சியாக இருந்த அனுராவை தன்னோடு சேர்த்துக் கொண்டுவிட்ட பின்னர் அங்கு சலிதோஷம் நீங்கி விட்டது என்பதை உணராத நிலையிலும் விஜேதுங்கா தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதில் பெரிதும் அக்கறை காட்டினார்.

ஆனால் இப்போது...? தேர்தல்களை பிற்போடுவதற்கு வழிவகை ஏதாவது உண்டா என்று ஆராய்ந்து வருகிறார். ஜனாதிபதியின் பதவிக்காலத்தையும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் மேலும் ஆறு வருடங்களுக்கு நீட்டிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தலாமா என்பது குறித்துக் கூட அரச உயர் வட்டாரங்களில் மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனவாம்.

பதினேழு வருடத் தொடர் ஆட்சியில் தென்னிலங்கை மக்கள் வெறுப்படைந்து விட்டனர். எப்படியாவது ஆட்சி மாற்றம் ஒன்று தேவையென்று அவர்கள் கருதுகிறார்கள். அரிசி விலைக்கு கியூவில் நிற்காமல் பான் வாங்குவதைவிட, குறைந்த விலைக்கு கியூவில் நின்று அதனை வாங்க மக்கள் விரும்புகிறார்கள் என்று சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவர் கூறியது போல, ஐக்கிய தேசியக்கட்சியை பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்ற விருப்பம் தென்னிலங்கை மக்களிடம் வளர்ந்திருக்கிறது.

அண்ணனும் தம்பியும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிகளுடன் இணைந்திருப்பது வாக்குவளக் கருதியே என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமே. வரலாற்றுச் சரிபோக்கையே ஆதாரம் கொண்ட ஸ்ரீ. ல. சு. கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் அண்ணன் தம்பியே. அவற்றின் கொள்கை, கோட்பாடு, செயற்பாடுகளில் பெரிதான வேறுபாடுகள் இல்லை.

சந்திரிகா குமாரணதுங்கா தாமும் திறந்த பொருளாதாரக் கொள்கையையே கடைப்பிடிக்கப் போவதாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்துக் கூறினாலும், ஆட்சிக்கு வருமுன்பே சிறிமாவோ உலகவங்கி அதிகாரிகளுடன் பேசியதும் கவனிக்கத்தக்கவை.

ஆயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட ஆட்சி தென்னிலங்கை மக்களுக்குப் புளித்துப்போய்விட்டது. அடிக்கடி ஆட்சி மாறாமல் ஒற்றுமையை ஏற்படுத்தி கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்து, தமது தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி, ஏனையோரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு ஜனாதிபதி தனக்குத் தெரிந்த (பிறர் கூறும்) தந்திரங்களையும், உத்திகளையும் கையாண்டு வருகிறார்.

தமக்கு எதிராகச் செயற்படுபவர்களையும், தமக்கு வேண்டாதவர்களையும் களைந்தெடுத்துவிட்டு, தமக்குப் பக்கபலமாக நிற்கக்கூடியவர்களையும், வாக்குத் தேடித் தரக்கூடியவர்களையும், அரவணைப்பது என்பது அவரின் உத்தியாக இருக்கிறது.

இந்த வகையில் அமைச்சர் சிறிசேனகூரேயின் கட்சிச் செயலாளர் பதவி என்ற தொப்பியைக்கழற்றிவிட்டார். கூரேக்கு விசுவாசமாக உள்ள அதிகாரிகளையும், பணியுச் செட்டைகளைக் கழற்றுவது போலக் கழற்றி வருகிறார். அமைச்சரவை மாற்றம் ஒன்றைச் செய்து சிறின் தலைகளை உருட்டுவதோடு, அதிகாரிகள் பலரினதும் தலைகளையும் உருட்டித் தமக்கு விசுவாசமானவர்களை நியமிக்கத் திட்டமிட்டு இருக்கிறார்.

இந்த வரிசையில் "ஹவுஸ்" பத்திரிகை நிறுவனத்தை மோதிக் கொள்ளாமல் சாது போல கட்சிச் செயலாளர் பதவியிலிருந்து விலகிய சிறிசேனகூரே, ஆறி இருக்கிறார் என்று கொள்ளக்காத புலி பதுங்குவது பாய்வதற்குத் தான் என்று அவரைக் கொண்டிருக்கிறார்களும், அவருக்கு நெருக்கமானவர்களும் கூறுகிறார்கள்.

விஜேதுங்கா, காமினியை மட்டுமென்ன, அரசியல் குளத்தை தனித்திருப்பு பெயர் போன, பெரிய கிழட்டு நரி என அழைக்கப்படும் ஜே.

உதயகாந்தன்

ஆனாலும் அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்கிவிடும் திறமை கூரேக்கு உண்டாம். பிரேமதாசாவைப் போல நினைத்ததை முடிக்கும் வல்லமையும் கூரேக்கு நிறைய இருக்கிறதாம்

எனவே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் விசகிருந்த புயலை அடக்கி விட்டதாக ஜே. துங்கா நினைக்கக் கூடாது புயலுக்குப் பின்னர் அமைதி வருவது உண்மையே ஆனாலும், அமைதிக்குப் பின்னர் தான் புயல் உருவாகிறது என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியிற் காட்டப் திட்டமிடப்பட்ட, பிரேமதாசா சஜித் பிரேமதாசா ஆகியோரையும் அமைச்சர்களாக்குவதற்கு விஜேதுங்கா படாதபாடு படுகிறார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இங்கே ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்த விஜேதுங்கா முயல்கிறார்.

பிரேமதாசா குடும்பத்தை உள்ளே அழைத்து வந்துவிட்டால் அவரது ஆதரவாளர்களின் வாக்குகளை அள்ளி எடுக்கலாம் என்பது ஒன்று. சிறிசேன கூரே பிரேமதாசா அணி ஒன்றை உருவாக்கும் ஆபத்தைத் தடுத்து அவரைப் பலவீனப்படுத்தி விடலாம் என்பது மற்றது.

கூரேயுடன் இணைந்து செயற்பட்ட ரணில் அவரிடமிருந்து பிரித்துத் தனிமையில் விட்டது விஜேதுங்காவுக்கு கிடைத்த வெற்றியே. எனினும் காமினி உள்ளுக்குள் வந்தமும் ரணில் - காமினி மோதல் தவிர்க்கமுடியாததாகும்.

இத்தனைக்கும் விஜேதுங்காவுடன் இப்போதைக்குப் பெரி

தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை. வடக்கில் வாக்களிப்பு நடக்காமல் ஜனாதிபதித் தேர்தல் நடந்ததாகக் கொள்ள முடியாது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாட்டின் எல்லாத் தேர்தல் மாவட்டங்களிலும் நடக்க வேண்டும். எனவே வடக்கைத் தவிர்த்து ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வாய்ப்பும் அவருக்கு இல்லை.

ஆனால் தேர்தலுக்கு முன்னர் யுத்தம் நிறுத்தப்பட்டு, தேர்தல் நடத்துவதற்கான சூழல் வடக்கில் உருவாக்கப்பட வேண்டும். அரசமைப்பின் 33 ஆவது சரத்தின், "உ" பிரிவின் பிரகாரம் போரையும், சமாதானத்தையும் பிரகடனம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு ஆனால் வடக்கு-கிழக்கில் போரை நிறுத்தி சமாதானத்தைப் பிரகடனப்படுத்துவதை தாமதிக்கக் கூடாது.

அமாவாசை காத்திருக்காது

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலம் அவர் தேர்தெடுக்கப்பட்ட திகதியை அடுத்துப் பிறக்கும் பெப்ரவரி நான்காம் நாளே தொடங்குகிறது (31.4) அதாவது விஜேதுங்காவின் பதவிக் காலம் 1995 பெப்ரவரி 4ஆம் திகதியே முடிவடைகிறது

ஜனாதிபதியைத்தேர்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு பதவியில் உள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாமலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாமலும் நடைபெறுதல் வேண்டும் என்று அரசமைப்பின் 31ஆவது சரத்தின் 3ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

இதனை வாய்ப்பாகக் கொண்டு விஜேதுங்கா ஜனாதிபதித் தேர்தலை 1995 ஜனவரியிலோ அல்லது இவ்வருடம் டிசம்பரிலோ நடத்த உத்தேசித்திருக்கலாம்.

அவ்வாறு முடிவு செய்தாலும் வடக்கின் மீது பெரும் இராணுவத் தாக்குதலை நடத்துவதாக அவர் எவ்வித அறிவிப்பையும் அடையப் போவதில்லை. இராணுவத் தாக்குதலின் பின்னர் இங்கு தேர்தலை நடத்துவதென்பது சாத்தியமானது

அதனாலேயே அவர் "சுமுகத் தீர்வு" என்ற புதிய பாடலை இசைக்கத் தொடங்கி இருக்கிறார். "நான் சிறுபான்மையின எதிராளன்" என்று ஐக்கிய தேசியக் கட்சியிற் காட்ட திட்டமிடப்பட்ட, கூட்டுறவான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதனை நீங்கள் அறிவீர்கள். நாள் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மற்றும் குறிப்பிட்ட ஒரு பிராந்தியத்தினருக்கு உரிய ஜனாதிபதி எனவும் காட்ட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இவற்றினால் நீங்கள் தலைவராக வழி நடத்தப்படக்கூடாது" — என்று முஸ்லிம் லீக் மாநாட்டில் பேசுகையில் தான் தூயவன் என்று காட்டவும் முனைந்திருக்கிறார்.

காட்சியை மாற்றுவதாக, பாடங்களை மாறி இசைப்பதாக நடக்கப் போவது எதுவுமில்லை. தாம் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டுமானால், விஜேதுங்கா யுத்தத்தை நிறுத்தி, தீர்வுக்கான பேச்சைத் தொடங்க வேண்டும். தமது கட்சி நிலை சீராகும் வரை காத்திருந்தால் காரியம் நடக்குமா? ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருப்பதில்லையே! ஐ.தே.க உட்பூசலைத் தீர்த்து தமது தலைமைத்துவத்தை ஸ்திரமாக்கி, கட்சி மீது தமது பிடியை இறுக்கும் வேளையை அவர் விரைவில் செய்து முடிக்கவேண்டும்.

ஆனால் ஜனாதிபதிக்கு புதிய ஆலோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தாமல் —

நாடாளுமன்றத் தேர்தலை நவம்பரில் நடத்தி அதில் ஐ.தே.கவை எப்படியாவது வெற்றி கொள்ளச் செய்து —

அதன் பின்னர் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன் வைத்து, பேச்சு நடத்தி வடக்கு - கிழக்கிலும் சமநிலையைத் தோற்றுவித்து ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம் என்பதே புதிய ஆலோசனையாகும்.

தென்னிலங்கை மக்கள் இப்போதுள்ள நிலையில் ஐ.தே.கட்சி வெல்ல வேண்டுமானால் —

தேர்தலின்போது பணாக்காரமும் அதற்கு முன் பயங்கரவாதமும் நடத்தப்பட வேண்டும்.

தெற்கில் இரண்டையும் செய்வதற்கு எதிரணியும், மக்களும் அனுமதிப்பார்களா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும்

*

கர்மயோக சாதனை புரிய இல்லறமே சிறந்தது

முக்தி அடைவதற்கு எது சிறந்த சாதனம்? கர்மயோகமா, ஞானயோகமா என்று கேட்கிறார்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால், ஓர் ஊரை அடைவதற்கு முதலில் படகில் செல்ல வேண்டும், பிறகு ரயிலில் செல்ல வேண்டும் என்று இருக்கும் போது, அந்த ஊர் செல்ல படகில் போகலாமா அல்லது ரயிலில் போகலாமா என்று கேட்பது போல இருக்கிறது.

எப்படி ஊரை அடைய படகும் தேவை, ரயிலும் தேவையோ, அதே மாதிரி

சமயம்

முக்தியடைய கர்ம யோகமும் தேவை, ஞான யோகமும் தேவை.

தாகத்தைத் தீர்க்க எப்படி தேர்ப்பையும் தேவை, அதில் உள்ள தண்ணீரும் தேவையோ, அதே மாதிரி இரண்டு யோகங்களும் தேவை.

இரண்டும் தேவை என்றால் எந்த யோகத்தை வேண்டுவது? முன்னால் செய்யலாம் என்றால் முடியாது.

எப்படி கஷ்டப்படாமல் முடிந்து பக்கலைக்கரையிலிருந்து சேரனாமோ, அது மாதிரி கர்ம யோகம் செய்த பிறகு தான் ஞான யோகம் செய்ய வேண்டும்.

முதல் பாதை

முதலில் கர்மயோகம் என்கின்ற பாதையில் செல்ல வேண்டும். அது நம்மை ஞான யோகம் என்கின்ற பாதையில் கொண்டு போய்விடும். பிறகு ஞானயோகப் பாதை நமக்கு முக்தியில் கொண்டு சேர்க்கும்.

கர்மயோக சாதனைக்கு இல்லறம் தான் சிறந்தது. ஏனெனில் இல்லறத்தில் இருக்கும் போது நாம் பலர் நடுவில் வாழ்கிறோம். அதனால் குடும்பத்திற்குத் தொண்டு புரியலாம். பிறகு நாட்டிற்குத் தொண்டு புரியலாம். கர்ம யோகத்தில் மூலம் சித்த சுத்தி கிடைக்கும்.

சித்த சுத்தி கிடைத்த பிறகும், கர்மம் புரியலை விட்டு ஞானயோகத்தில் பிரவேசிக்காமல் இருந்தால், அது கரையை அடைந்த பிறகும், படகை விட்டு இறங்காமல் இருப்பதற்குச் சமம்.

ஞான யோக சாதனைக்கு துறவறம் தான் உகந்தது. ஏனெனில் ஞானயோகத்திற்கு வேதாந்த சிரவணமனை நிதித்தியாசம் செய்வதற்கு சந்தடியற்ற, ஏகாந்தமான துறவற வாழ்க்கை தான் சிறந்தது.

இல்லறத்தில் இருந்தாலும் சரி அல்லது துறவறத்தில் இருந்தாலும் சரி கர்மயோகம் ஞான யோகம் ஆகிய இரண்டையும் பின்பற்றினால் தான் முக்தி கிடைக்கும்.

சுவாமி
பரமார்த்தானந்தா

உருளைக்கிழங்கு சேமிப்பில் வெற்றியும் சாதனையும்

தீராத உறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டவர்கள் எமது விவசாயிகள். விவசாயிகளின் நலத்தை பேணுவதாக கூறிக்கொண்டு அவர்களுக்கு தெரியாமல் அவர்களின் பணம் பல வழிகளில் சுரண்டப்பட்டுக் கொண்டு வந்துள்ளது உள்ளூர் பெரு வெங்காயம் [illegible] சந்தைப்படுத்தல் வரை விவசாயிகள் படும் பிரச்சினைகள் பல. சமயம் பெரும் பாதிப்புக்கள் கூட ஏற்படுவதுண்டு எனினும் உறுதியான இவர்களின் மனநிலையும் குறைந்தபட்சம் உற்பத்தி முறைகளைத் தெரிவு செய்யும் ஆற்றலும் உற்பத்தி முயற்சிகள் தொடர்வதற்கு காரணமாக அமைகின்றன.

1993 ஆம் ஆண்டு உருளைக்கிழங்கை உற்பத்தி செய்த அதனை 3 மாதங்களுக்கு வரை சேமித்து வைத்திருந்தும் ஊரெழுவைச் சேர்ந்த முன்னோடி விவசாயியான திரு விஜயசேகரம் (உருத்திரா) என்பவரின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். 3 ஏக்கரில் உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொண்ட இவர் தனது முழு அறுவடையையும் விஞ்ஞானரீதியான முறையில் கொட்டிகள் அமைத்து பரண்களிட்டு காற்றோட்டம் கிடைக்கக் கூடியவாறு ஏற்பாடு செய்திருந்தார். ஒவ்வொரு மாங்கிழங்கினாலும் [illegible] ஏற்பட்டு [illegible] ஏற்பட்ட [illegible] விலை அதிகரிப்பால் இவர் பலமடங்கு ஆதாயம் பெற்றார் என்பதுடன் [illegible] பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது

இதிலும்பார்க்க [illegible] கொடுக்கவேண்டிய [illegible] கொடுத்தல் [illegible] மூலமும்

அறிவிருத்தி

இவ்வாறான [illegible] முயற்சியும் [illegible] பாராட்டத்தக்கதே. ஒரு [illegible] சாதனை [illegible] புதிய சாதனை [illegible] விலை வீழ்ச்சியால் பாதிப்படையாமல் [illegible] இவர் [illegible] பாதுகாப்பான வளர்ச்சி முறையை பேணுதல் மூலம் பயனடையலாம்.

விவசாயத்துறை, [illegible] போன்றவற்றில் அனுபவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 8

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ ஊரெழு றோயல் வி. க. அணி எதிர் கோண்டாவில் உதயசூரியன் அணி.

★ அனலைவெட்டி விநாயகர் அணி எதிர் காங்கேசன்துறை யங்றோயல் அணி.

(இ-5)

★ ★ ★

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் இன்று ஞாயிறு கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட சற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இன்றைய போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழக அணிகள் வருமாறு:-

கிரிக்கெட்

★ முற்பகல் 9 மணி — ஐங்கரன் வி. க எதிர் அடைக்கலமன்னன் வி. க. (A) அணி.

★ பிற்பகல் 3 மணி — இளம் தமிழர் மன்ற அணி எதிர் கொய்யாத் தோட்டம் ஐ. வி. க. அணி.

கரப்பந்தாட்டம்

★ பிற்பகல் 3 மணி — (ஒவர்) சென். அன்றாலிஸ் வி. க. எதிர் வள்ளுவர் வி. க. (A) அணி.

★ மாலை 4 மணி — (செற் அப்) பாரதி வி. க. அணி எதிர் இமேச் வி. க. அணி.

(இ-5)

★ ★ ★

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் டொனால்ட் கணேஷ்குமார் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடக்கும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ மாவிப்பாய் பரிஷ் வி. க எதிர் கொக்குவில் மத்திய ச. ச. நிலைய 'பி' அணி

(இ-5)

வல்வை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தானைவடிப் பகுதிகளில் உள்ள குடிவிருப்புகளை நோக்கி முதலில் தாக்குதலை மேற்கொண்டது. பின்பு வடமராட்சி, திக்கம் மற்றும் பொலிகண்டிப் பகுதிகளை நோக்கியும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது.

மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கியிருந்ததன் காரணமாக உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-155-15)

பேச்சுப் போட்டி

சரசாலை நுணாவில் சிறீமாபர மிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழாவையொட்டி சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் சரசாலைப் பகுதி மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி ஒன்றை இன்று காலை 8 மணி முதல் ஆலய முன்றலில் நடத்தவுள்ளனர்.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஆலயத் தேர் உற்சவத்தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும். (ச-117)

ஹோட்டல்கள் பாதுகாப்பை பலப்படுத்த அரசு காலக்கெடு

கொழும்பு, மே 8

கொழும்பில் உள்ள உல்லாசப்பயண ஹோட்டல்கள் தங்கள் பாதுகாப்புக்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி வரை காலக்கெடு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலப் பகுதிகளுக்குள் ருண்டுகள், வெடிப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் கருவிகளைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்று ஹோட்டல்கள் மற்றும் உல்லாசப்பயண நிறுவனங்கள் கோரப் பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பு ஹோட்டல்களில் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இப்பாதுகாப்பு நடவடிக்கைகளை வெளிநாடுவதுதுறை அமைச்சு மற்றும் உல்லாசப் பயணத் துறை அமைச்சு ஆகியவற்றுடன் சேர்ந்து பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ளது.

(த-எ)

இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 45) ஆகிய இரு மீனவர்களுமே அந்த சம்பவத்தில் உயிரிழந்ததாகவும் —

மதி (வயது 40) என்பவரே காயமடைந்ததாகவும் இராமேஸ்வரம் மீன்பிடித்துறையின் உதவி இயக்குநர் தெரிவித்தார்.

இந்தவேளை —

கடந்த வியாழனன்று இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் வேதாரணியத்தைச் சேர்ந்த 3 இந்திய மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கிக் காயப்படுத்தினர். (இ-5)

தென்மராட்சி சபை...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அன்றைய தினம் கோட்டையில் நிலையத்துக்கு சமீபமாக உள்ள அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் இருந்த மூவர் மரணப்படையினால் கொல்லப்பட்டதை தன்னால் ஊர்ஜிதம் செய்யமுடியும் என்றும் அதே நபர் பத்திரிகையாளருக்குத் தெரிவித்திருக்கிறார்.

மரணப் படையினருக்கு முன்னாள் அரசியல் தலைவர்களின் பூரண ஒத்துழைப்பு இருந்ததாகவும் அவர் கூறினார்.

'மரணப் படை'யின் செயற்பாடுகள் குறித்து தகவல் தெரிவிக்க அஞ்சியிருந்த பலர் இப்போது அதற்கு முன்வந்திருப்பதாக அவதானிக்கத் தெரிவித்தனர்.

மரணப்படையினரிடம் நடவடிக்கைகள் குறித்து பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டபோது, அரசியல் காரணங்களுக்காக அவற்றைப் பதிவு செய்வதற்கு பொலீஸ் அதிகாரிகள் மறுத்ததாகவும் இப்போது தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

மரணப்படையினருக்கு பொலிசாரிடம் ஒத்துழைப்பு இருந்து வந்ததாகவும் அந்தப் படையைச் சேர்ந்த ஒருவரை கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை குறைத் தடுப்பு பொலீஸ் பணிமனைக்குள்ளேயே மரணப் படையின் தலைவர் தாக்கும் அளவிற்கு அவர் செல்வாக்குடன் இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக் குறிப்பிட்ட இளைஞர் சமீபத்தில் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நின்ற சமயம் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்ற பாதகங்களை மரணப்படையால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கத் தொடங்கி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (அ-6)

இன்று

அறவழி இலக்கியப் பேரவையினர் நடத்தும் இலக்கிய சொற்பொழிவு இன்று பிற்பகல் 3 மணியளவில் வைரமுத்து நுணாவில் கண்டி வீதி ஆறுவழி பயிலகத்தில் நடைபெறும்.

"தென்மராட்சியில் இலக்கிய முயற்சியின் ஒரு நோக்கு" என்ற தலைப்பில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபர் திரு அ. பொ. செல்லையா சொற்பொழிவாற்றுவார். (த)

★ ★ ★

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி பயிற்சி நிலையத்தில் சமய பிரிவுஞ்குமான கற்கை அமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருப்பதாக கலை பயிலுநர்களையும், பேராசிரியர்களையும் சமூகமளிக்குமாறு தொலைக்கல்வி சிரேஷ்ட பேராசிரியர் திருமதி. லெ. பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

★ ★ ★

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் இன்று காலை 9 மணி தொடக்கம் கோழிஞ்ஞக்கு தடுப்பூசி போடப்படும்.

(இ-45-9)

உருளை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னவர்கள் மேலும் மேலும் இவ்வாறான முறைகளை ஆராய்ந்து பொருத்தமானவற்றை அறிமுகப்படுத்தினால் மேலும் பெருமளவும் பலன் எமது விவசாயிகளுக்குக் கிடைக்கும்.

—தகவல்:

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

6 விவசாயிகளுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விளைச்சலைப் பெற்ற விவசாயிகள் வேளாண் மன்னர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்ட ரீதியாகத் தனித் தனியே தெரிவு செய்யப்பட்ட 'வேளாண் மன்னர்களுக்கே தமிழீழ தேசியத் தலைவர் பதக்கமும், விருதும், சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார்

யாழ். மாவட்டத்தில் ஒருவரும், கிளிநொச்சி முல்லை ஆகிய மாவட்டங்களில் தலா இருவரும் மன்னார் மாவட்டத்தில் ஒருவருமாக ஆறு பேர் வேளாண் மன்னர்களாகத் தெரிவு செய்யப்பட்டு தலைவரின் விருதுகளை பெற்றனர்.

விருது வழங்கும் வைபவத்திற் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர்களும், பணியாளர்களும் கலந்து கொண்டனர். (இ-எ-5-162)

மன்னாரில்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் இயக்கப் போராளியான வெப்டினன்ட் கதியவன் (மாணிக்கராசா அன்றாவி — நிலாவதி துறை) என்பவர் வீரச்சாவடைந்தார்.

நேற்றைய கதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

★ 203 ரிவோல்வர்	— 01
★ ரி 56 – 1 ரகத் துப்பாக்கி	— 01
★ ஏ. கே. மகஸீன்	— 07
★ ஜே. ஆர். கிரனேட்	— 08
★ நடுத்தர ரவை	— 6452
★ வெளிச்சக் குண்டு	— 02
★ ஏ கே. ஹோல்ஸர்	— 01
★ ஏ. கே எல். எம். ஜி. ஹோல்ஸர்	— 01
★ தண்ணீர் கான்	— 09
★ மழைக் கவசம்	— 10
★ சப்பாத்து	— 10 சோ
★ இராணுவத் தொப்பி	— 01
★ பொலீஸ் தொப்பி	— 01
★ இராணுவப் பட்டி	— 01

(இ-5)

10 நிமிட நேரத்-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி	- 01
★ ரி 56 புதிய ரகத் துப்பாக்கி	- 01
★ 60 மி. மீ. ஷெல்	- 16
★ ஏ. கே. மகஸீன்	- 03
★ நடுத்தர ரவை	-855
★ சிறிய கிளைமோர் கண்ணிவெடி	- 01
★ வயர் றோல்	- 01
★ வெடிக்க வைக்கும் கருவி	- 01
★ தண்ணீர் கான்	- 03
★ ஏ. கே. எல். எம். ஜி. ஹோல்ஸர்	- 01
★ மழைக்கவசம்	- 01
★ இராணுவப் பட்டி	- 03
★ "கிட் பாக்"	- 02

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

தன்னாட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்மீது எண்ணற்ற கொடுமைகளை இழைத்து வருகிறது; பெரும் அநீதிகளைப் புரிந்து வருகிறது.

இந்தக் கொடூரமான அடக்குமுறைகளை எல்லாம் மிகவும் துணிவுடனும், தளராத உறுதியுடனும், வியக்கத்தக்க முறையில் எமது மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள்.

பொருண்மிய போர்

கடந்த நான்கு ஆண்டுகளாக, தமிழீழ தேசம் மீது, ஒரு திட்டமிட்ட பொருண்மிய தடையை சிங்கள அரசு திணித்து வருகிறது தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைச் சிதைத்து. அவர்களது நாளாந்த சீவியத்தை சீர்குலைக்கும் நோக்கில் இந்தத் தடை விதிக்கப்பட்டன. தமிழினம் தனது காலில், தனித்து வாழமுடியாது; சிங்கள தேசத்தில் தங்கிவாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்கி, தமிழன் தன் னாட்சிப் போராட்டத்திற்கு சாவுமணி அடிக்கும் நோக்கும் இந்தப் பொருண்மியப் போர் தொடுக்கப்பட்டது

இந்தப் பொருண்மியத் தடை எமது மக்களின் வாழ்நிலையில் என்றுமில்லாத பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது உண்மை போர் அனர்த்தங்களுடன், பொருண்மிய அழுத்தங்களுமாக எமது மக்கள் தாங்கொணாச் சுமைகளை தாங்கிநிற்க நிர்பந்திக்கப்பட்டனர்.

எவ்வெனும் இந்தப் பெரும் அழிவில் விளைவாக எமது மக்கள் மத்தியில் ஒரு புதிய விழிப்புணர்வும் ஏற்பட்டதை மறக்கவில்லை. தடைகளால் விளைந்த பாதிப்பும், அதனால் எழுந்த பற்றாக்குறையும், அந்தப் பற்றாக்குறையால் பிறந்த தேவைகளுமாக ஒட்டுமொத்தத்தில் சுயசார்புப் பொருளாதாரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எமது மக்களுக்கு நன்கு உணர்த்தியது அநியாய அழுத்தங்களுக்கு அடிபணிந்து போகாது, எமது மண்ணில் எமது மண்ணின் வளத்தில் நாம் தங்கி நிற்க வேண்டும் என்ற தலைவரையும் உணர்த்தியது.

உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி

இந்த விழிப்புணர்வு எமது மக்களின் உழைப்பாற்றலை முனைப்புறச்செய்தது. உழைக்கும் மக்களின் உதிரத்தால் உரமூட்டப்பட்டு எமது தேசிய பொருளாதார வாழ்வு என்றுமில்லாத மறுமலர்ச்சி கண்டது நெல் உற்பத்தி, பயறு உற்பத்தி, கடல் வள உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தியாக, இன்று பல்வேறு துறைகளில் உள்ளூர் உற்பத்தி உயர்ச்சி கண்டு வருகிறது. எமது மக்களின் அயராத உழைப்பிற்கும், தளராத உறுதிக்கும் சான்றாக, ஒன்று எமது தேசிய பொருளாதாரம் தனது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க முனைகிறது. எதிரி திணித்துவிட்ட பொருண்மியத் தடைகள் எமது தேசத்தை முடக்கிவிடவில்லை. பதிலாக, எமது தேசத்தின் பொருளுற்பத்தியை முடுக்கிவிட்டிருக்கிறது. எவற்றே சொல்லவேண்டும்.

எமது தன்னாட்சி உரிமைப் போராட்டம் தமிழீழத் தனியரசை நிறுவும் இலட்சியத்தைக் கொண்டது இந்தத் தனியரசை நிர்மாணிப்பதற்கு ஒருதன்னிறைவான பொருண்மியக் கட்டமைப்பு அவசியம். எனவேதான், அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கிறது

நாம் நிர்மாணிக்கப்போகும் நாடு தங்கு நிலையற்றதாக, தன் காலில் தரித்து நிற்று வளர்ச்சி பறக்கூடியதாக அமையப்பெற வேண்டும். அதற்கான அறிவுரைதை நாம் இப்பாழுதிருந்தே கட்டியெழுப்பவேண்டும்.

தமிழீழம் ஒரு செழிப்பான பூமி, வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய நீர்வளத்தையும், நிலவளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனங்கண்டு அவற்றை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திறமையான திட்டமிடலின் அடிப்படையில், உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதி நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் இந்த இலக்கில், எமது கைமப்பான. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆக்கபூர்வமான பணிகளை நிட்டங்களை செயற்படுத்தி வருகிறது இந்த முயற்சிகள் வெற்றியெனு ஆகிவிட்டன.

வேளாண் மன்னர்

உழைக்கும் மக்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது இதன் ஒரு முக்கிய அம்சமாக, வேளாண்மைத்துறையிலும் போட்டியை நிலைத்தி 1993-1994 ஆண்டுக்கான 'வேளாண் மன்னர்களை' தெரிவு செய்திருக்கிறது. எமது தாயக மண்ணிலே பொன் விளைவித்து, ஆபாரமான சாதனை ஈட்டிய உழவர்களுக்கு 'வேளாண் மன்னர்' விருதுகளை வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்

இப்படி வாழ்த்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

தங்கப்பதக்கம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி.டபிள்யூ 351 இன நெல்லினை நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையில் பயிரிட்டு ஏக்கருக்கு சராசரி 176.4 புசல் விளைவைப் பெற்று முல்லை மாவட்டத்தின் வேளாண் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்றார்.

✲ வேலுப்பிள்ளை சிவபாதம்

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இவர் மழையை நம்பிய நெற்செய்கையில் பி ஜீ 500-1 இன நெல்லினை பயிரிட்டு ஏக்கர் ஒன்றுக்கு 103.9 புசல் விளைவு பெற்று முல்லை மாவட்டத்தின் வேளாண் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது பெற்றார்.

மன்னார் மாவட்டம்

✲ திரு யோசெப் சகாயராசா பெரேரா

மன்னார் மாவட்டம் சதிகிடந்த குளத்தைச் சேர்ந்த இவர் நீர்ப்பாய்ச்சுகை நெற்செய்கையில் கீழ் பி ஜீ. 11 - 11 இன நெல்லைப் பயிரிட்டு ஏக்கருக்கு சராசரி 188 75 புசல் விளைச்சல் பெற்று மன்னார் மாவட்டத்தின் வேளாண் மன்னராகத் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றார். (இ-5-162)

மரண அறிவித்தல்கள்

முருகேசு பாலசிங்கம்

(காரைநகர்)

காரைநகர், நவமுமி வழுப்போடையைப் பிறப்பிடமாகவும், 54 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர் முருகேசு பாலசிங்கம் 7 - 5 - 94 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெம்பரப்பிள்ளை முருகேசு - காசுபதிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சந்தையா, மற்றும் சபாரத்தினம், திருமதி அபிராமிப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சந்தர், பொன்னம்பலம், சிவலிங்கம் ஆகியோரும், காலஞ்சென்ற பொன்னம்மா, சுப்பிரமணியம், மற்றும் பத்மாவதி, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், தியாகலிங்கம், சற்குணநாதன், வசந்தகுலநாயகி, சரோசினிதேவி ஆகியோரது பெரிய தகப்பனாரும், வசந்தகோமள், பாலேந்திரன், இராசமலர், யோகேஸ்வரி, மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 8-5-94 பி. ப. 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்:

தகவல்:
இராசம்மா
(மனைவி)

54, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (30795)

நாகலிங்கம் விஸ்வலிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் வசித்தவருமாகிய இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் (வவுனியா), நாகலிங்கம் விஸ்வலிங்கம் 5-5-94 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், விஸ்வா, லதா (லண்டன்), உருத்திரா (கனடா) சுதா, வாகினி (லண்டன்), நிலானி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீநிசா (முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி வவுனியா), தத்துஸ்தந்தன் (லண்டன்), டீரதன், திருக்குமார் (லண்டன்), ரந்விதரன் (கனடா), பவாவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் A 5, அன்டர்சன் தொடர்மாடி, நாரஹன்பிட்டி இல்லத்தில் 8-5-94 இன்று பகல் 11 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியை கனதை இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
தா ஸ்ரீநேசா
(மருமகன்)
ஹற்றன் நஷனல் வங்கி
வவுனியா

(30792)

திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம்

கொக்குவில் பிரம்படியை சேர்ந்த திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள் காலமானார்

அன்னார் கொக்குவில் மேற்கு பஞ்சவனப்பதியை சேர்ந்த ஏரம்பு சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மகேந்திரன் (தொழிற்நுட்ப உத்தியோகத்தர் யாழ். மாநகரசபை), மனோராதி, காலஞ்சென்ற மகேஸ்வரன் (ஆடம்), மகாதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயாரும், விஜயலக்ஷ்மி, சாவித்திரி, ஆகியோரின் மாமியாரும், திருமதி செகம்மா விநாயகமூர்த்தியின் சகோதரியும் அனுசியா, சுகன்யா, தேவகன், தனுசுயா, சாயிஜனனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (8-5-94) நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மகேந்திரன்
(மகன்)

மில்லேன்,
பிரம்படி,
கொக்குவில் (30796)

மரண அறிவித்தல்கள்

விரகத்திப்பிள்ளை நாகலிங்கம்

இடைக்காட்டை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய இளைப்பாறிய ஆசிரியர் விரகத்திப்பிள்ளை நாகலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற ஆசிரியை சின்னம்மாவின் அன்புக் கணவரும், கமலேஸ்வரியின் அன்பு தந்தையும் ஜெயக்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஹம்பாந்தோட்டை) ஆன்பு மாமனாரும் கம்ஷாயினியின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (8-5-94) பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கமலேஸ்வரி ஜெயக்குமார்
(மகள்)

சீ.சீ.ரீ.எம். பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (30797)

மார்க்கண்டு சூசைமுத்து

(முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர்)

திருநெல்வேலி கம்பஸ் லேனைச் சேர்ந்த மார்குசைமுத்து 5-5-94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலம்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்ற கந்தையா, லட்சுமி, தம்பதிகளின் மருமகனும், திருமதி இராசமணியின் அன்புக் கணவரும், மேரி கொன்ஸ்ரன் (ஒஸ்ரியா) காலம்சென்ற யேசுராசா, நேசராசா (ஜேர்மனி), ஜெயராசா (கனிஸ்), ஜீவராசா (தொழில்நுட்பக் கல்லூரி), றொபிராசா, சாமஸ் நிமலராசா (முத்துத்தம்பி ம. வி), கதிர்தராசா (ஸ்ரீ இராமகிருஷ்ணா ம. வி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிறிதர் (ஒஸ்ரியா), சுதா (கொழும்பு), ஆகியோரின் மாமனாரும், ஆனோட், மைக்கல் ஸ்ரீபன், டேவிட் (ஒஸ்ரியா) ஆகியோரின் அன்புப் பேரனும், முத்துப்பிள்ளை, யோகமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரை, இராசவிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொக்குவில் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (30798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 409/13 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 - 05 - 1994 இல் அச்சிடப் பெறுகிறது.